14வது வருடத்தில்
# விளம்பரம்
VLAMBARAM™
416-282-8059 416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
OPEN 7 DAYS
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

வீடு விற்க, வாங்க...
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto
Direct: 416.315.9397
OFFICE: 416.321.6969
Sales Agents Welcome


நதி 14 பாலம் 17 சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம் SEPTEMBER 01, 2004



2008 இல் ஒலிம்பிக்கை எதிர்பார்க்கும் சீனா 06



கனடாவில் கடன் சரிதம் 02



வைகோவின் அர்பணிப்பு செயலூக்கம் பேச்சுத் திறன் 03

செப்ரெம்பர் 25, 04
**பொங்குதமிழ்**
Queens Park
Toronto

## பயங்கர மனநோயாளிகள் (Psychopath)

*"I wanted to be most prolific killer in Canadian history"* - நீதிபதியிடமே தன்னுடைய குரூரமான கனவினை வெளிப்படுத்தியவன் தான் Ferrier. ஒரு போதும் குணப்படுத்த முடியாத மனநோயாளியான இந்த Ferrier (31) பதினேழு வருடங்களுக்குப் பின்னர் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டான்.


'நான் மூன்று கொலைகளைச் செய்துள்ளேன். ஆனால் ஒரு போதும் அதற்காக மாட்டிக் கொள்ளவில்லை' Ferrier உளவ-ியல் நிபுணர் ஒருவரிடம் குறிப்பிட்டுள்ளான். இது அவன் தொடர்பான பத்திரங்களில் குறிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சி யான பாலியல் பலாத்காரங்கள், உட்பட 60க்கும் மேற்பட்ட குற்றச் செயல்களுக்காக நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட இவன் Warkworth Prison in Campbellford, Ont. வில் இருந்தே விடுவிக்கப்பட்டான். இதே சமயம் 'குணப்படுத்த முடியாத மனநோயாளி' என்று சிறைச்சாலை மருத்துவரால் சித்திரிக்கப்பட்ட இவன் குறித்து பொதுமக்களுக்கு 'Peel Regional பொலிசார் எச்சரிக்கைகளை விடுத்தனர். விடுலைக்குப் பின்னர் Brampton பகுதியிலேயே தான் வாழப்போவதாக Ferrier தெரிவித்ததைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் பெரும் அச்சமும் பீதியும் அடைந்தனர்.

'இது பயங்கரம்! இவனை விடுலை செய்துவிட்டார்கள் என்று என்னால் நம்பமுடியாமல் உள்ளது. எப்படி இவனை பொது மக்களுடன் வாழ அனுமதித்தார்கள்?' என்று ஒரு பெண்மணி தன்னுடைய பயத்தை வெளிப்படுத்தினார். 'எனக்கு மூன்று இளம் குழந்தைகள் உள்ளன. என்ன சொல்வது என்றே எனக்குத் தெரியவில்லை. நான் நினைக்கின்றேன் இவனை இன்னம் நீண்ட காலத்திற்கு சிறையிலேயே வைத்திருக்கலாம்' என்று இன்னொரு பெண் பீதியோடு கூறினார். இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் 'விடுதலையாகினால் அவன் என்னைக் கொன்றுவிடுவான்' என்று Ferrier யின் பெற்றதாய் பயத்தில் கதி கலங்கி அலறினாள்.

விடுதலைக்குப் பின்னர் Brampto ஹொட்டல் ஒன்றில்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# மூன்று தங்கப் பதக்கங்களை கனடா வென்றது




கிரேக்கத்தில் நடைபெற்ற 2004 ஒலிம்பிக்கில் கனடா மூன்று தங்கப் பதக்கங்கள் உட்பட ஒட்டுமொத்தமாக பன்னிரெண்டு பதக்கங்களை மட்டுமே வென்றெடுத்துள்ளது. இதில் ஆறு வெள்ளிப் பதக்கங்களும், மூன்று வெண்கலப் பதக்கங்களும் உள்ளடங்குகின்றது.

2000 - Sydney ஒலிம்பிக்கில் ல் 14 பதக்கங்களையும், 1996 Atlanta வில் 22 பதக்கங்களையும், 1992 Barcelona வில் 18 பதக்கங்களையும் கனடா வென்றெடுத்திருந்தது. அதிகபட்சமான பதக்கங்களை கனடா வென்றெடுத்தது 1984ல் Los Angeles ல் நடை-பெற்ற ஒலிம்பிக்கிலேயே ஆகும். அந்த ஆண்டு 44 பதக்கங்களை கனடா வென்றெடுத்திருந்தது.


2004 ஒலிம்பிக் போட்டிகளின் முடிவுகளை அடுத்து கனடாவில் இது பற்றிய சர்ச்சை பெரும் அளவில் நடைபெறத் தொடங்கிவிட்டது. பல மில்லியன் டொலர்களை ஒலிம்பிக் போட்டிக்காக கனேடிய அரசு ஒதுக்குகின்ற போதும் இது ஒலிம்பிக் போட்டியில் பங்கு பெற்றுகின்ற விளையாட்டு வீரர்களின் பயிற்சிக்கு சரி-வரப் பயன்படுத்தப்படுகின்றதா? என்ற கேள்வி இப்போ முன்வைக்கப்பட்டுள்ளது.

ஒலிம்பிக் போட்டிக்காக தம்மை தயார் படுத்துகின்ற வீரர்கள் பலர், தமது பயிற்சிக்காக போதுமான வசதி-களைப் பெற பணம் இல்லாமல் தவிக்கின்ற அதே வேளை, ஒலிம்பிக் நிகழ்சிகளை பார்ப்பதற்காக சில அதிகார வட்டத்துக்கு அரை மில்லியன் டொலர் செல-வழிக்கப்பட்டுள்ள சம்பவம் இப்போ அம்பலமாகியுள்ளது.

2004 ஒலிம்பிக்கில், 35 தங்கங்கள் உட்பட அதிகபட்சமான 103 பதக்கங்களை அமெரிக்காவும் , ருஸ்யா 27 தங்கங்கள் உட்பட 92 பதக்கங்களையும், சீன 32 தங்கங்கள் உட்பட 63 பதக்கங்களையும் வென்று முதல் மூன்ற இடங்களையும் பிடித்துள்ளன.



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

Singapore Communication
Since 1991
$45.00/ Month
• Up to 700 Min Free
• Evenings & Weekends Free
• 2 Year contract
••• Offer Ends without notice •••
Family plan $40.00/ M/2 phones
•100 Min Daytime to share /Weekend Free
• Upgradable for Free Evening with more Min 2500 Min Free
• between 2 phones V/M, C/W, C/C Free
• Buy one phone as low as $49.99 & 2nd Free
••• 2 year contract
More Info. Call:416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

"Making Dreams Reality"

HomeLife GTA Realty Inc.
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416-817-8479
Bus: 416-321-6969
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER


Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)
• Auto • Home • R.R.S.P • Life
• Disability • Mutual Fund • Group Insurance • Child Education
• Travel & Business

416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி

DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto

# கடன் சரிதத்தை இலவசமாகப் பெறமுடியுமா?

## பெரி. முத்துராமன்



கடன் சரிதத்தை அடிப்படையாகக் கொண்டு சில சமயங்களில் இன்ஸ்ரன்ஸ் பிரீமியமும் (Insurance Premium) தீர்மானிக்கப்படுகின்றது. இதை முன்பே எழுதியிருந்தோம். எப்படி என்று சிலர் கேட்கிறார்கள். குறிப்பாக வீட்டு இன்ஸ்ரன்ஸ் பிரீமியத்தைத் தீர்மானிக்கும் போது கனடாவில் இரண்டு இன்ஸ்ரன்ஸ் கம்பெனிகள் உங்கள் கடன் சரிதத்தைப் பார்த்து, அதைப் பொறுத்தும் பிரீமியத் தொகையைத் தீர்மானிக்கின்றன. அந்த இரண்டு கம்பெனிகள் - ஐஎன்ஜி (ING) யும், எக்னாமிக்கல்( Economical) உம் ஆகும்.

**கடனை ரிப்பேர் செய்கிறோம் என்று பல கம்பெனிகள் விளம்பரம் செய்கின்றன. உங்கள் கடன் சரிதத்தில் தவறு இருந்தால் அதை நீங்களே தக்க ஆதாரங்களைக் கொடுப்பதன் மூலம் ரிப்பேர் செய்து கொண்டு விடலாம்.**

தேவைக்கதிகமாக கிரிடிட் கார்டுகளை வைத்திருக்கும் போது, இந்த இரண்டு கம்பெனிகளும் உங்களை "ரிஸ்க்" அதிகம் கொண்டவராகக் கருதுகின்றன. எனவே வீட்டு இன்ஸ்ரன்ஸ் பிரீமியத்தைக் கூட்டுகின்றன. கடன் சரிதத்தை இன்ஸ்ரன்ஸ் பிரீமியத்தைத் தீர்மானிக்கப் பயன்படுத்துதல் அமெரிக்காவில் பிரபல்யம். கனடாவில் இன்னும் வேரூன்றவில்லை. ஆனால் அந்த நாள் தூரத்தில் இல்லை என்றே தோன்றுகின்றது.

உங்கள் வயது, ஆண், பெண் என்ற பேதம், திருமணமானவரா என்ற விபரம் என்பன வற்றிற்கு அப்பாலும் உங்கள் கடன் சரிதத்தை அடிப்படையாகக் கொண்டு, நீங்கள் எதிர்காலத்தில் இன்ஸ்ரன்ஸ் கம்பெனிகளிடம் இருந்து நஷ்டஈடு கோருவீர்களா என்று இந்த கம்பெனிகள் தீர்மானிக்கின்றன. கடன் சரிதத்தைப் பார்த்து எவ்வளவு அதிகம் இந்த கம்பெனிகள் பிரீமியத்தை கூட்டும் என்ற விபரம், இந்த கம்பெனிகளுக்காக வேலை செய்யும் புரோக்கர்களுக்கே தெரிவதில்லை என்பது மற்றும் ஒரு சுவையான செய்தி; பாதிக்கப்படும் வாடிக்கையாளருக்கோ இது வேதனையான செய்தி. உங்கள் கடன் சரிதத்தில் தவறு இருந்தால், அது உங்கள் பிரீமியத்தைப் பாதிக்கவே செய்யும்.

தவறான கடன் சரித்திரம் பல வழிகளில் உங்கள் அன்றாட வாழ்வைப் பாதிக்கக் கூடும். ஓர் உண்மைச் சம்பவத்தை மட்டும் இங்கு பார்ப்போம். ஜனவரி 1994 இல் றோபர்ட் நீல் கிளார்க் என்பவர் கடன் கேட்டு றோயல் வங்கியில் விண்ணப்பித்தார். அவருடைய கடன் சரிதத்தில் நோவா ஸ்கோஸ்சியா வங்கிக்கு பணம் கட்டத் தவறிய குறிப்பும், அதனால் அவருக்கு மிக மோசமான R - 9 மதிப்பீடும் வழங்கப்பட்டிருப்பதையும் பார்த்து றோயல் வங்கி கடன் தர மறுத்தது. இதை அறிந்த றோபர்ட் இந்தக் குறிப்பு தவறு என்று கூறி எக்யுபாக்ஸ் Equifax நிறுவனத்துக்கு விண்ணப்பித்தார். எக்யு பாக்ஸ் நிறுவனம்தான் பலரின் கடன் சரித்திரத்தை நிர்வகிக்கின்றது. எக்யுபாக்ஸ் நிறுவனம், தவறு இருந்தால் நிவர்த்திப்பதாகக் கூறினாலும், அதை நிவர்த்திக்க அது ஆண்டுகளுக்கு மேல் எடுத்துக் கொண்டது. இந்த இடைப்பட்ட காலத்தில் றோபர்ட்டால் எங்குமே கடன் வாங்க முடியவில்லை.

கடைசியில் எக்யுபாக்ஸ் நிறுவனம் 2000ம் ஆண்டில் இதே பெயரில் உள்ள வேறு ஒருவர்தான் இந்த நிலைமைக்குக் காரணம் என்று கண்டறிந்தது. பிறகு நலம் குறிப்பிடும் றோபர்ட்டின் சரிதத்தில் இருந்த தவறை நிவர்த்தி செய்தது. பல தொல்லைகளுக்கு ஆளான குற்றம் செய்யாத றோபர்ட், ஸ்கோஸ்சியா வங்கியின் மீதும் எக்யுபாக்ஸ் நிறுவனத்தின் மீதும் வழக்குத் தொடர்ந்தார். இதை விசாரித்த ஒன்ராரியோ உயர் நீதிமன்றம் ராபர்ட்டுக்கிச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கியது. நீதிமன்றத்தில் ஸ்கொஸ்சியா வங்கி தனது தவறை ஒப்புக்கொண்டது.
கடனை ரிப்பேர் செய்கிறோம் என்று பல கம்பெனிகள் விளம்பரம் செய்கின்றன.

**செய்யும் தொழிலில் வெற்றி பெற**

**உடனடியாக உங்கள் கடன் சரிதத்தைப் பார்க்க வேண்டும் அல்லது தேவை என்றால் பணம் செலுத்த வேண்டியிருக்கும். அது $14.50 டொலர்களிலிருந்து $21.50 டொலர் வரை இருக்கக் கூடும்.**

உங்கள் கடன் சரிதத்தில் தவறு இருந்தால் அதை நீங்களே தக்க ஆதாரங்களைக் கொடுப்பதன் மூலம் ரிப்பேர் செய்து கொண்டு விடலாம். இத்தகைய கடன் ரிப்பேர் பேர்வழிகளை அணுகினால் ஏமாற்றத்துக்கு ஆளாகி மேலும் பணத்தை இழக்க நேரிடலம். இதுவே பலரின் அனுபவம். உண்மையிலேயே உங்கள் கடன் சரிதத்தில் பிரச்சனைகள் இருந்தால், அதை ரிப்பேர் பேர்வழிகள், மூலமாக சரி செய்து கொண்டு விட முடியாது. எனவே குறுக்கு வழிகளில் முயலாமல் இருத்தல் பணத்தை மிச்சப்படுத்தும்.

இவ்வாறு பல வழிகளிலும் அன்றாட வாழ்வைப் பாதிக்கும் கடன் சரிதத்தை இலவசமாகப் பெறமுடியும். உங்களைப் பற்றி என்ன எழுதப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிந்து கொள்ளும் உரிமை உங்களுக்கு இருக்கின்றது. கனடாவில் கடன்சரிதத்தை நிர்வகிக்கும் இரு முக்கிய கம்பெனிகள் -

(1) எக்யு பாக்ஸ் (Equifax Canada Inc.)
(2) டிரான்ஸ் யுனியன் (Transunion).

உடனடியாக உங்கள் கடன் சரிதத்தைப் பார்க்க வேண்டும் அல்லது தேவை என்றால் பணம் செலுத்த வேண்டியிருக் கும். அது $14.50 டொலர்களிலிருந்து $21.50 டொலர்கள் வரை இருக்கக் கூடும். ஆனால் நீங்கள் இரண்டு முதல் நான்கு வாரங்கள் வரை காத்திருக்கத் தயார் என்றால், இலவசமாகப் பெறலாம். நீங்கள் அவ்வாறு இலவசமாகப் பெறத் தபாலில் உங்களுடைய இரண்டு அடையாளங்களை இணைக்க வேண்டும். அந்த அடையாளங் கள் உங்கள் டினாவில் லைசென்ஸ், வங்கிக் கணக்கு விபரம், தொலைபேசி, மின்சாரம், கேபிள் போன்ற பில்கள் என்று எந்த இரண்டாக வேண்டு மானாலும் இருக்கலாம். உங்கச் சோசியல் இன்ஸ்ரன்ஸ் நம்பரையும் நீங்கள் கொடுக்க வேண்டும் இதற்கான மாதிரி விண்ணப்பப் படிவத்தை www.equifax.ca என்ற இணையத் தளத்தில் நீங்கள் பெறலாம். இந்த நிறுவனங்களின் விலாசம், தொலைபேசி எண் போன்றவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. Equifax Canada Inc
Consumer Relation Dept.
P.O. Box 190, Station Jean - Talow,
Montreal, Quebec H1S 2Z2
Tel - 1-800-465-7166 Fax - 514-355-8502
www.econsumer.equifax.ca

2. Transunion Canada
Consumer Relations
709, Main St. w, Suite 3201
Hamilton, Ontario L8S 1A2
Tel - 1-800-663-9980 Fax 905-527-0401
www.tuc.ca

உங்களுடைய Credit History ஐ பெற்று கொள்ளுவதற்கான படிவம் (Request to obtain my credit history report) தேவைப்படுபவர்கள் என்னுடன் தொடர்பு கொள்ளலாம்.



கடன் சரிதம் பற்றி மேலும் விபரம் அறிய விரும்புவர் பெரி.முத்துராமனுடன் 416-430-0623 இல் தொடர்பு கொள்ளலாம். மின்அஞ்சல்: perrii@successbizsolaiton.com

• • •


HOME INSPECTION

• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள...
• வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

ந. தயாபரன்
Certified Inspection Specialist
Expert Building Inspections LTD.
• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report
24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336



நாளையை இன்றே தொடுவோம்



• கடந்த சில வருடங்களில் இன்ஸ்ரன்ஸ் பிரிமியம் குறைந்து வந்துள்ளது, உங்களுக்குத் தெரியுமா?
• உங்களுக்கு ஏற்ற காப்பீடு, சரியான பிரிமியத்தில் உள்ளதா என்று தெரிந்து கொள்ள வேண்டுமா?
• குழப்பம் தரும், காப்பீடு பற்றிய விவரங்களை இலகு தமிழில் புரிந்து கொள்ள வேண்டுமா? அப்படியானால் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியவர்.

பெரி. முத்துராமன் 416.430.0623.
A licensed broker, working for you.

இவர் எல்லாக் கம்பெனிகளின் பிரிமிய விவரத்தையும் கூறி, உங்களுக்கு ஏற்ற இன்ஸ்ரன்ஸையும் எடுக்க உதவுவார். பிறகென்ன! இழப்பதற்கு ஒன்றுமில்லை, எல்லாம் லாபம்தான்.

இன்றே தொடர்பு கொள்ளுங்கள் 416. 430.0623
A. Licensed borker working for you.

பெரி. முத்துராமன், MBA, M.COM., PFPC
Insurance Broker
Award Insurance Brokers inc.
Tel. 416-430-0623 Cell. 416-278-2026



விளம்பரம் VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.




பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ்.
விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059, FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca

# வைகோ - திறமையும் அதிஷ்டமும்



தமிழ் நாட்டில் மட்டுமல்லாது, இந்திய அரசியலிலேயே, வைகோ என்று பிரபலமடைந்துள்ள மறுமலர்ச்சி திராவிட முன் னேற்றக் கழக தலைவர், வை. கோபாலசாமி மிகவும் சுவாரஸ்யமான மனிதர். படித்தவர். வழக்கறிஞர். உணர்ச்சிகள் கொப்பளிக்க, ஆவேசக்குரலில் மணிக்கணக்கில், களைப் படையாது அரசியல் மேடைகளில் பேசும் வல்லமையும், திறனும் படைத்தவர். மேடைப் பேச்சையே ஒரு நாடகமாக்கும் திறனும் அவருக்கு உண்டு. இந்த குணங்களும் வல்லமையுமே, பேச்சாளர்களே நிறைந்த, பேச்சுத்திறமையினாலேயே வளர்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தில், நீண்ட காலம், 1990 வரை வைகோவை தனிச் சிறப்புக் கொண்ட தலைவராக்கின.

## வெங்கட் சாமிநாதன்

வைகோ தென்கோடி மாவட்டம் ஒன்றின் கலிங்கப்பட்டி என்னும் கிராமத்தில் பிறந்த வர். தெலுங்கு பேசும் நாயக்கர் வகுப்பைச் சேர்ந்தவர். இது மிக முக்கியமான விவரம். எல்லா அரசியல் தலைவர்களுக்கும், அவர்களது அரசியல் வாழ்க்கைக்கும், கட்சிக்கும், எந்த அரசியல் செயல் பாட்டிற்கும், தேர்தலுக்கும் இந்த சாதி விவரம் மிக மிக முக்கியமானது. ஆனால் இது பொதுவில் பேசப்படமாட்டாது. ஒப்புக்கொள்ளப்படமாட்டாது. மௌனத்தில் புரிந்து கொள்ளப்படும். ஆனால் இவர்கள் எல்லாம் உரக்க கோஷமிட்டு சாதி இல்லாத சமுதாயத்திற்காக, பார்பனீயத்தை ஒழிக்கப் பாடுபடுபவர்கள் தான். ஆனால் தங்களுக் குள் பேசும், எடுக்கும் முடிவுகளில் சாதி மிக முக்கிய பங்கு வகிக்கும். 1916 லிருந்து சாதி ஒழிப்பே தன் தலையாய கொள்கையாகச் சொல்லி பலவேறு பெயர்களில், அவதாரங் களில் தொடர்ந்து வரும் இயக்கத்தின், தலைமையின் பிரக்ஞையில் நடு நாயகமாக வீற்றிருப்பது, இந்த உணர்வுதான். வைகோவுக்கு கணிசமான ஆதரவு உள்ள தென் மாவட்டங்களில் உள்ள இரு பெரும் வகுப்புகளில், வைகோவின் நாயக்கர் வகுப்பும் ஒன்று. தேர்தல் அரசியலில் சாதி ஒரு வோட்டு வங்கி (vote bank) வைகோ எந்த கட்சியில் உள்ளாரோ, அந்த கட்சிக்கு தென்மாவட்டங்களில் உள்ள அவரது வகுப்பு மக்களின் ஆதரவு தானாக மடியில் வந்து விழும். இது தமிழ் நாட்டின் வாழ்வுண்மை. இரண்டாவது உண்மை, மற்ற கட்சிகள் பலம் பெற்றுள்ள மாவட்டங்களில் கூட, நாயக்கர் வகுப்பினரின் அரசியல் ஆதரவு அவருக்கு இல்லாது போனாலும், சாதி அபிமானம் ஓர் அனுதாபத்தைப் பெற்றுத்தரும். வைகோ திமுக விலிருந்து வெளியேற்றப்பட்ட போது, அவருக்கு புதிய கட்சி தொடங்க நிதி உதவி அளித்தது, கோவை மாவட்ட நாயக்கர் வகுப்பைச் சேர்ந்த தொழில் அதிபர்கள் என்று சொல்லப்படுகின்றது.

வைகோவின் அர்ப்பணிப்பு, செயலூக்கம், பேச்சுத்திறன், இளைஞரிடையே பெற்ற கவர்ச்சி, தென் மாவட்டங்களில் அவருக்கு இருந்த செல்வாக்கு எல்லாம் அவரை திமுக தலைமையின் இரண்டாம் இடத்திற்கு உயர்த்தி இருக்கவேண்டும். எந்த கட்சியிலும் இது ஓர் இயல்பான வளர்ச்சியாக இருக்கும். திமுக வின் தலைமைகளும் அப்படித்தான் வளர்ந்தன. 1969 வரை. அண்ணாதுரையின் மறைவும், கருணாநிதியின் கைக்கு வந்து விட்ட அரசியல், அரசுத் தலைமைகளும், அக்கட்சியின் குணங்களை தலைகீழாக்கின. திமுக ஒரு குடும்பம் என்று கருணாநிதி சொல்லிக் கொண்டால், அதன் பொருள், கட்சி அவர் குடும்ப வளர்ச்சிக்காகத்தான் என்பது மறைபொருள். 1971 தேர்தலுக்குப் பிறகு, கட்சியிலும், அரசிலும் கருணாநிதியின் ஸ்தானம் ஸ்திரமானதும், அவரது குடும்ப உறவினரைத்தவிர வேறு யாருக்கும் கட்சியின் இரண்டாம் தலைமை இல்லை என்றாகி விட்டது. பேராசியர் எனப்படும் அன்பழகனுக்கு ஓர் அலங்கார இரண்டாம் படி இருக்கை மட்டுமே உண்டு. யாரும் கருணாநிதியின் ஒப்புதலும் ஆசீர்வாதமும் இன்றி, தன் செல்வாக்கின் பலத்தில் உயர்ந்து விட அனுமதிக்கக் கூடாது என்று கருணாநிதியின் தொலை நோக்கு ஆரம்பக் காலத்திலிருந்தே தீர்மானித்து இருந்தது. திமுக வில் முன்னர் இருந்த மூத்த தலைவர் யாருக்கும் இத்தகைய தொலை நோக்கு இருந்ததில்லை. இப்போதைய வைகோ பற்றிய சந்தர்ப்பத்தில், நாம் 80-களின் கடைசியில் இருந்து பார்க்கலாம். இடையில் இன்னொன்றையும் சொல்லி வைக்கலாம். கட்சியில் யாருக்கும் எதிராக கருணாநிதி எதுவும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் போதெல்லாம் வைகோ கருணாநிதியின் பக்கமே உரத்து ஆதரவு தருவார். இன்னு மொன்று, கருணா நிதியின் தலைமையை ஏற்பதென்பது, ஒருவர் தன்னை முற்றாக அழித்துக்கொண்டு சரண் அடைவது என்ப தாகும். இருப்பினும் கட்சியில் யாருக்கும் தனக்கும் தன் குடும்ப அக்கறைகளுக்கும் பாதிப்பாக வளர்வதாக கருணாநிதியின் தொலை நோக்கு சந்தேகித்தால், அந்த மனிதரின் வளர்ச்சி உடன் துண்டிக்கப்படும். திமுக ஒரு குடும்பம் என்பதை கட்சியில் எல்லோரும் சரியாக புரிந்து கொள்ள வேண்டும்.

தொடக்கத்திலிருந்தே கருணாநிதியின் மகன் மு.க.ஸ்டாலின் இளைஞரணியின் தலைவராக்கப்பட்டு, கட்சித் தலைமைக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. மக்களிடையே எந்த செல்வாக்கும் இல்லாத, கட்சிப்பணி என்றும் ஏதும் செய்தறியாத, ஆனால் கருணாநிதி யால் தன் மனசாட்சி என்று அதிகாரம் வழங்கப்பட்ட அவரது மருமகன் முரசொலி மாறனுக்கு, வைகோ உள்ளிட்ட மற்ற திமுக எம்.பி.க்களை பின் தள்ளி, மந்திரிப் பதவி தரப்பட்டது கட்சியில் ஒரு முணுமுணுப்பு கூட எழவில்லை. யாருக்கும் தைரியமில்லை. மனதுள் மௌனப்பொருமல் ஊகிக்கப்பட லாம். காற்றில் கலக்கவில்லை. தன் 'உயிருக்குயிரான தலைவர்' கருணாநிதியை இதற்குள் வைகோ புரிந்து கொள்கின்றார். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை இரகசியமாகக் கடல் கடந்து சந்தித்து வருகின்றார், வைகோ. தன் அனுமதியின்றி ஒருவர் தன் கட்சியில் செயல்படுவதை கருணாநிதியால் பொறுத்துக் கொள்ள முடியுமா என்ன? வைகோவின் வளர்ச்சியை சந்தேகத்தோடு பார்த்து வந்த கருணாநிதி, இப்போது வைகோவிடம் தெரியும் தலைமைப்பதவி ஆசைகளை எப்படி சும்மா விட்டு வைப்பது? தன்னைக் கொல்ல சதித்திட்டம் என 'றோ' (Raw) தனக்குத் தகவல் தந்துள்ளதாக கருணாநிதி வைகோ மீது குற்றம் சாட்டி, அவரைக் கட்சியிலிருந்து நீக்குகிறார்.

வைகோ, மறுமலர்ச்சி திமுக என தனக்கு ஒரு கட்சியைத் தொடங்கிக்கொள்கிறார். தன் மக்கள் செல்வாக்கில், அவருக்கு பெரும் நம்பிக்கை, பிரிந்து வந்துவிட்ட வைகோ, கருணாநிதியை மிகக் கடுமையாக தாக்கிப் பிரசாரம் செய்கிறார். தன் சுய நலத்திற்காக வும், தன் குடும்ப நலத்திற்காகவுமே கட்சி நடத்துவதாகவும், திருவாரூரில் ஒரு கப் 'ரீக்கு ஏங்கிக் கொண்டிருந்த கருணாநிதி பல ஆயிரங்கோடிக்கணக்கில் சொத்து சேர்த்தது எவ்வாறு? என்று அவர் இதுகாறும் தான் சொல்லாத, எல்லோரும் சந்தேகித்த, கட்சியினரும் மௌனமாகப் பொருமிக் கொண்டிருந்த உண்மைகளையே இப்போது பிரசாரம் செய்தாலும், கட்சி நீக்கத்திற்குப் பிறகே சொல்லப்படுவதால், கட்சியினரைப் பாதிக்கும் வலு இல்லாது போயிற்று. கட்சிக்கு வெளியே இருந்தவர்களுக்குத்தான் பிரச்சாரம் உவப்பாக இருந்தது. கருணா நிதிக்கோ தன் தார்மீக பிம்பம் தாக்கப்படுவதைப் பற்றிக் கவலை இல்லை. அது தன் கட்சித் தலைமை பலத்தால், செல்வாக்கின் பலத்தால், அதிகார பலத்தால் சரிசெய்யப்படக் கூடியதே. தான் வளர்ந்த பாதை இவை பற்றியெல்லாம் கவலைப் படாது கடந்து வந்த பாதைதான். வைகோ கூட தன் கட்சியில் இன்னும் இருக்கும் மற்றவர் போல் இந்த தார்மீக சமாச்சாரங் களைப்பற்றிக் கவலைப்படாது இது நாள் வரை இருந்தவர் தானே. ஆயினும் திமுகவின் அதிருப்தி கொண்ட ஒரு பகுதி யினரையும்தன் தென்மாவட்டத்தினரையும் தன் பக்கம் அவர் தன் புதிய கட்சியில் இழுத்துக்கொண்ட போதிலும், தனக்கென ஒரு கட்சி தொடங்கி அதற்கு தலைவரானதற்கு மேல், அவரால் கட்சியை ஏதும் பெரிய அளவில் பிளந்து விட முடியவில்லை. கட்சியில் விசுவாசமும், சுய அக்கறைகளும் கொண்ட ஒரு கெட்டித்த மையப் பகுதி (the hard core) கெட்டிப்பட்டே இருந்தது.



இதன் பிறகு வைகோவின் நடவடிக்கை எப்படி அமைந்தது என்று அடுத்தவாரம் பார்ப்போமா?

**வைகோவின் அர்பணிப்பு, செயலூக்கம், பேச்சுத் திறன், இளைஞரிடையே பெற்ற கவர்ச்சி, தென் மாவட்டங்களில் அவருக்கு இருந்த செல்வாக்கு எல்லாம் அவரை திமுக தலைமையின் இரண்டாம் இடத்திற்கு உயர்த்தி இருக்க வேண்டும். எல்லா அரசியல் தலைவர்களுக்கும், அவர்களது அரசியல் வாழ்க்கைக்கும், கட்சிக்கும், எந்த அரசியல் செயல்பாட்டிற்கும், தேர்தலுக்கும் இந்த சாதி விவரம் மிகமிக முக்கியமானது. ஆனால் இது பொதுவில் பேசப்படமாட்டாது, ஒப்புக்கொள்ளப்படமாட்டாது. மௌனத்தில் புரிந்து கொள்ளப்படும்.**


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road, Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL

# பயங்கர மனநோயாளிகள் (Psychopath

தங்குவதற்குச் சென்ற Ferrier க்கு அனுமதி மறுக்கப்பட்டது. கிறடிட் காட், மற்றும் அடையாளத்தை உறுதி செய்வதற்கான ஆதாரங்களும் அவனிடம் இல்லை என்று காரணம் சொல்லப்பட்டது. இரவு பத்து மணிக்குப் பிறகு தங்குவதற்கு இடம் எதுவும் இல்லாத நிலையில் Peel 22 Division பொலிஸ் நிலையத்தில் Ferrier தஞ்சம் அடைந்தான். இதே சமயம் தொலைக்காட்சி நிருபர் ஒருவருக்குக் கொலைப் பயமுறுத்தல் விடுத்ததாக Ferrier மறுநாள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டான். முதல் நாள் அவனை நிபந்தனைகளுடன் விடுதலை செய்த அதே நீதிபதியால் மறுபடியும் இரண்டு வருடச் சிறைத்தண்டனை அவனுக்கு விதிக்கப்பட்டது.

அப்பாடா ஒரு வழியாக இந்தச் சிக்கல் இப்போதைக்கு தீர்ந்தது என்று பெருமூச்சு விடாதீர்கள். கனடாவில் மாத்திரம் 300,000 Psychopath இருக்கின்றனர் இது எம்மாத்திரம். வட அமெரிக்காவில் இரண்டு மில்லியன் Psychopath உள்ளனர். இந்த Psychopath கள் உங்கள் நண்பராக இருக்கலாம். உங்கள் மேலதிகாரியாகவும் இருக்கலாம். காதலனாகவோ காதலியாகவோ இருக்கலாம். அல்லது உங்கள் குடும்பவைத்தியராக, உங்கள் கணவராக, மனைவியாக, அரசியல்வாதியாக, கடவுளின் பெயர் சொல்லி சித்து வித்தை காட்டும் மகானாக, பெரும் தொழில் அதிபராகக் கூட இருக்கலாம்.

**"கனடாவின் பிரதமராக ஒரு Psychopath ஆல் வர முடியுமா" என்பது தான் அந்த சிக்கலான கேள்வி. மில்லியன் கணக்கான கனேடிய மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது அந்தப் பதில்.**

எப்படி இவர்களை அடையாளம் காணுவது?

சாதாரணமாக இவர்களை அடையாளம் காணமுடியாது. அதி வசீகரமானவர்கள் (superficial charm). பார்த்த மார்த்திரத்தில் மற்றவர்களை தம் பக்கம் கவர்ந்து இழுத்து விடும் ஏதோ ஒன்று இவர்களிடம் எப்போதும் இருக்கும். புத்திசாலிகள். வார்த்தைகள் எந்தவிதமான தடையும் இல்லாமல் அலை அலையாக வந்து விழும். இவர்கள் பேசுவதை வாய்பிளந்து கேட்டுக் கொண்டே இருக்கலாம். பொய் பேசுவது தண்ணீர் பட்டபாடு. Lie detector இவர்களைக் கண்டால் பயந்து ஓடிப்போய் விடும். மிக நேர்த்தியாக பொய் சொல்வதில் தேர்ச்சி பெற்றவர்கள். பாவம் இவர்கள் - உண்மையை பேசுவதுவதற்கு மட்டும் சரியாகக் கஸ்டப்படுவார்கள்.

## கனியா

தொடர் கொலைகள், பெரும் கிரிமினல் குற்றங்களுடன் தொடர்பு படுத்தி எப்போதாவது பத்திரிகைகளில் இவர்களின் பெயர் வரும் போது இவர்களைப் பற்றித் தெரிந்து கொள்வீர்கள். ஒரு Psychopath உடன் தொடர்பாக இருந்திருக்கின்றீர்களே என்று அப்போது நிச்சயம் உங்களுக்கு திகைப்பாக இருக்கும். அதிகமான White- collar கிரிமினல்கள் எல்லாரும் Psychopath களே ஆகும். உங்கள் ஆறுதலுக்காக ஒன்றைச் சொல்லலாம். உண்மையில் பெரும்பான்மையான Psycho path களால் ஆபத்து எதுவும் இல்லை. விரல் விட்டு எண்ணக் கூடிய சிறிய எண்ணிக்கையானவர்களே ஆபத்தானவர்கள். Psychopath எல்லாரும் கொலைகாரர்களும் இல்லை. ஆனால் தமக்கு தேவை என்று கருதும் போது கொலையும் செய்யத் தயங்கமாட்டார்கள். எதிரிப்படைகளை மூர்க்கத்தனமாக கொன்று குவிக்கின்ற இராணுவ ஹீரோக்களை அல்லது பொதுமக்களை கொன்றொழித்த வீரர்களைப் பற்றி அறிந்திருப்பீர்கள். இராணுவத்தில் எதிரிகளை அழித்து ஒழிக்கின்ற Killing machine கள் உண்மையில் இந்த Psychopath கள் தானாம். ஏதிரிகளை ஈவு இரக்கம் இன்றி கொன்று குவிப்பதில் இவர்கள் பலே கில்லாடிகள். கொலை செய்வதையிட்டு எந்த வருத்தமும் இவர்களுக்கு கிடையாது. கருணையோ, இரக்கமோ இவர்களிடம் இல்லவே இல்லை. எனவே கொலை செய்யும் இயந்திரமாகவே தொழிற்படுகின்றார்கள்.

ஒவ்வொரு Psychopath க்கும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய தனிப் பண்பும் இருக்கும். Psychopath களின் முக்கியமான பிரச்சினை அவர்களின் மூளையிலேயே இருக்கின்றது. மூளையில் ஒன்றல்ல பல குறைபாடுகள் இவர்களுக்கு இருக்கும்.. சமூக கட்டுப்பாடுகள், கோட்பாடுகள், சட்டங்கள் ஒரு விளையாட்டாகவே இவர்களுக்கு இருக்கும். எப்போதுமே இதை மீறிக் கொண்டிருப்பார்கள். ஒரு வார்த்தையில் சொல்லுவதாயின் இவர்கள் மிக 'அபாயகரமான பேர்வழிகள்'. தமது இலட்சியங்களுக்கு எதிராக குறுக்கே இருக்கக் கூடிய எதையும் விட்டுவைக்க மாட்டார்கள். ஆனால் இவர்களில் பெரும்பாலானோர் சிறைகளுக்குள் இல்லை. ஏன் என்றால் இவர்கள் புத்திசாலிகள். திட்டமிட்டுக் காரியங்களைச் சாதிப்பதில் வல்லவர்கள். குளிர்சாதனப் பெட்டிக்குள் தான் கொலை செய்த மனிதத் தலைகளை அழகாக அடுக்கி அழகு பார்த்துக் கொண்டே பொலிஸ்மா அதிபருடன் வெகு கூலாக 'பியர்' அருந்தக் கூடிய மனவலிமையும், செல்வாக்கும் இருக்கக் கூடியவர்கள். அடிக்கடி பொலிசாரிடம் மாட்டிக் கொள்கின்ற Psychopath களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். இதற்குக் காரணம் இவர்களுக்கு கொஞ்சம் 'அறிவு' குறைவு என்பதே.



'நெருப்பு' என்று ஒரு குரல் கேட்கும்போது உங்களுக்கு 'திகீர்' என்று இருக்கும். 'தண்ணீர்' என்று சொல்லும் போது 'குளிர்ச்சியாக' இருக்கும். ஆனால் Psychopath களுக்கு இந்த விடயத்தில் பெரும் சிக்கல் இருக்கின்றது. 'நெருப்பு', 'தண்ணீர்', 'பூ', 'இரத்தம்', 'குழந்தை', 'மரணம்' என்ற எந்த சொற்களுக்கும் இவர்களின் மூளையில் வித்தியாசம் தெரியாது. கோரமாக இறந்து கிடக்கின்ற ஓர் உடலைப் பார்த்துக் கொண்டு ஐஸ்கிரீமை சுவைத்துச் சாப்பிடக் கூடிய மனநிலை இவர்களுக்கு உள்ளது என்றால் புரிந்து கொள்ளுங்கள் இவர்களைப் பற்றி.

**Psychopathகள் உங்கள் நண்பராக இருக்கலாம். உ[ங்கள்] மேலதிகாரியாகவும் இருக் கலாம். காதலனாகவோ காத[லியா]கவோ இருக்கலாம். அல்லது உங்கள் குடும்ப வைத்[திய]ராக, உங்கள் கணவராக, மனைவியாக, அரசியல்[வாதி]யாக, கடவுளின் பெயர் சொல்லி சித்து வித்தை கா[ட்டும்] மகானாக, பெரும் தொழில் அதிபராகக் கூட இருக்கலா[ம்].**

தாம் செய்கின்ற தவறுகளுக்காக இவர்கள் என்றுமே மனம் வருந்துவதில்லை. குற்ற உணர்வு என்றால் என்ன என்று இவர்களுக்குத் தெரியாது. இதற்கும் மேலாக வெட்கம், அவமானம் போன்ற உணர்ச்சிகளும் இவர்களுக்குக் கிடையவே கி[டையாது] ... கட்டுப்பாடுகள் இவர்களுக்குப் பி[டிக்காது]. பிடிக்காது. குழப்பங்கள் ஏதாவது ந... மிகவும் ஆசையோடு இரசித்துப் பார்ப்... தன்னைச் சூழ உள்ளவர்களும் மன... தானே என்ற எண்ணம் இவர்களுக்கு... போதும் தோன்றுவதே இல்லை.. ... களைப் பார்க்கின்ற போதெல்லாம் ... தமக்குக் கிடைத்துள்ள 'வாய்ப்புக்கள்' ... இவர்களுக்குத் தோன்றும். மற்றவர்களு... உரிமை பற்றி இவர்கள் ஒரு நாளும் ... போதும் சிந்திப்பதே கிடையாது. ... மனிதர்களின் உணர்ச்சிகளைப் பற்றிய ... வித கவலையும் இவர்களுக்குக் கி... இவை எல்லாவற்றுக்கும் காரணம் இவ... மூளையில் இதற்குரிய System ... அடையாததே என்று சொல்லப்படுகி... நீண்ட கால நட்புகள், நெருங்கிய உ...

தொடர்ச்சி 6ம் ப...


தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

**ரவி நடராஜா**



• வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும், உரிய இழப்பீடுகள், மற்றைய இழப்பீடுகள், விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள் **Accident & Traffic Ticket**

(14 Years Insurance Claims Experience)

416-245-6555 2095 Weston Road, Suite 203, Toronto, ON

416-755-2801 2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough. ON



**SMILE**

- BUSINESS PLANS
- CORPORATE TAX PREPARATION OF FILING
- PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
- ACCOUNTING, TAXATION
- SYSTEMS - POINT OF SALES

**RK CONSULTANTS**

PL. CALL: 905.887.7457 / 905.751.7537

24 hrs, 365 days

**சமர்பனா டான்ஸ் அகடமி**

**Samarpana Dance Academy**



**தேவா குணசீலன்**

**Artistic Director & Principal**

பரத நாட்டிய வகுப்புக்கள் கலாஷேத்ரா பாணியில் ( Kalakshetra... நான்கு இடங்களில் (4 locations) கற்பிக்கப்படுகின்றது.

**East York, Scarborough, Markham, Brampt...**

வயதிற்கு ஏற்ப தனி வகுப்புகள் உள்ளன. All age groups wel... ஆண்டு பரீட்சைகள், பள்ளி ஆண்டுவிழா, சான்றிதழ்கள் வ...கப்படும். அரங்கேற்றம் நடத்தப்படும். மேலும் அரங்கேற்றம் முடித்தவர்கள், பல மேடைகளில் நடனம் புரிய விரும்புபவர்களும் (Stage Performance), மற்றும் புதிதாக சேர விரும்புபவர்களும் அழையுங்கள்.



**416.944.2392**

gunadance@yahoo.com

*Admisions open till vijayadashimi*



# குறும்ப(எ)ட விழா

காலம் காலமாக ஒரு குறிப்பிட்ட பாதையிலேயே ஒரு மாற்றமும் இல்லாமல் சினிமாப்பாணி என்று யதார்த்தத்தை கை விட்டு பொழுது போக்கு என்பதற்கே முக்கியத்துவம் கொடுப்பதற்காக சமுதாய சீர்திருத்த விடயங்களை கூட சீரழிக்கும் சினிமாவையும் அதன் வாலான சின்னத்திரை தொடர்களையும் விட்டு மக்களிடையே நல்ல இரசனையை வளர்ப்பதுடன் கலை, இலக்கியத்துறைகளில் ஆர்வமும் ஆற்றலும் உள்ளவர்களுக்கு ஊக்கம் கொடுத்து அதன் மூலம் நல்ல பல படைப்புக்களை குறைந்த செலவில் கூட குறும்படங்களாகத் தயாரிக்கலாம், சொல்லப்படவேண்டிய கருத்துக்களையும், சீர்திருத்தங்களையும் திரைகளில் சொல்லி சிந்திக்க வைக்கலாம் என்ற நோக்கங்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட குறும்பட விழா ஓகஸ்ட் 14, 2004 சனிக்கிழமை Scarborough Civic Centre அரங்கில் நடைபெற்றது.

ஒரு துறையில் பூரண வெற்றி பெற வேண்டுமாயின் அத்துறை பற்றிய பூரண அறிவு வேண்டும். அந்த அறிவினை இரண்டு வகைகளில் பெறலாம். ஒன்று அத்துறை பற்றிய கல்வி, இரண்டாவது அனுபவ அறிவு அல்லது பட்டறிவு என்று சொல்லலாம். ஆனால் ஒரு துறைபற்றிய கல்வியும், அனுபவமும், கடின உழைப்பும் மாத்திரம் இருந்தால் மட்டும் அத்துறையில் வென்றிடலாம் என்று சொல்ல முடியாது என்பதற்கு உதாரணமாக தொலைக்காட்சி வானொலி துறைகளில் கிடைத்த சொந்த அனுபவங்களினால் அத்துறையில் வேறு தயாரிப்புகளில் இருந்து ஒதுங்கி இருக்கும் பரம். ஜியும் இப்படிப்பட்ட ஒரு நல்ல விடயம் தமிழ் மக்களுக்கு அதிலும் ஈழத்தமிழ் மக்களுக்கு மிக முக்கியமாக தேவை என்று எண்ணி விழாவை ஒழுங்கு செய்ய செயற்பட்டதில் கிடைத்த அனுபவங்களினால் உண்டான எண்ணங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறான்.

## சாதாரண மனிதன் சிந்தனையிலிருந்து

நல்ல உழைப்பினை ஊக்கப்படுத்த வேண்டுமாயின் அந்த உழைப்பு பாராட்டப்பட வேண்டும். செய்யும் தொழில்களில் கிடைக்கும் ஊதிய உயர்வு அதைத்தான் குறிக்கும். முதலில் நடைபெற்ற குறும்பட விழாக்களில் கலந்து கொண்ட குறும்பட தயாரிப்புகளின் தரத்தினை கண்டு, அதை ஊக்கப்படுத்து முகமாக இம்முறை சிறந்த குறும்படங்களுக்கு விருது கொடுத்து கௌரவிக்கப்பட வேண்டும் என்ற எண்ணங்களுக்கு கை கொடுக்க முன் வந்த Royal Bank Mortgage Specialist வின்ஸ் சின்னத்துரை, அகிலன் மயில்வாகனம், 'வீடு' பத்திரிகையின் ராம் சிவதாசன், "கனவுகள்" திரைப்பட தயாரிப்பாளர் 'Crystal Auto' அப்பன் நடா, 'சுதந்திர தாகம்' தயாரிப்பாளர் 'JAB Travels' ஜீவா ஆகியோர் முன்வந்தது அதிசயம் அல்ல. நல்ல முயற்சிகளுக்கு அவர்கள் தரும் நல்லாதரவு இங்கு வாழும் தமிழ் மக்கள் அறிந்ததே.

இம்முறை பங்கு பற்றிய குறும்படங்களில் கனடாவில் தயாரிக்கப்பட்டவை அதிகளவில் (12) கலந்து கொண்டமை மனதிற்கு மகிழ்ச்சியை கொடுத்தது. விழா அமைப்பாளர்களில் ஒருவர் என்ற வகையில் கவனிக்கப்பட வேண்டிய விடயங்களுக்காக விழா மண்டபத்தை விட்டு அடிக்கடி வெளியே சென்றுவர வேண்டி இருந்தமையில் எல்லாக் குறும்படங்களையும் பார்க்க முடியாமல் போனது வேதனையைக் கொடுத்தாலும் பார்க்கக் கிடைத்தவை தமிழ் குறும்படங்களின் எதிர்காலம் பற்றிய நல்ல நம்பிக்கையை மனதிற்குக் கொடுத்தது. பெற்றோர்கள், முதியோர்கள் வதைக்கப்படு வதைத் தவிர்ப்பது, பிள்ளைகளின் மனோநிலைகளை பாதுகாப்பதில் பெற்றோர்களின் பங்கு, குடும்ப பொறுப்பை ஆண்களும், பெண்களும் சமமாக பகிர்ந்து கொள்வது, ஆண் ஆதிக்கத்தின் கொடுமைகள், போதை மருந்தின் தாக்கம், இளைஞர்களிடையே வன்முறை, வேலையும், குடும்பமும் வேறு என்பன போன்ற சிந்திக்க வைக்கக் கூடிய விடயங்கள் சொல்லப்பட்டு இருந்தன. முழு நீளப்படம் ஒன்றை ஜனரஞ்சகமாக்க வேண்டிய கட்டாயம் இருப்பதனால் நல்ல கருத்துக்கள் அந்த படங்களில் தொலைந்து போயிருக்கும். ஆனால் குறும்படங்களில் சொல்லப்பட்ட விடயங்கள் பச்சக் என்று மனதில் ஒட்டிக் கொண்டு சொல்லப்பட்ட விடயங்கள் பற்றி சிந்திக்க வைத்தன.

> **ஒரு துறையில் பூரண வெற்றி பெற வேண்டுமாயின் அத்துறை பற்றிய பூரண அறிவு வேண்டும். அந்த அறிவினை இரண்டு வகைகளில் பெறலாம். ஒன்று அத்துறை பற்றிய கல்வி, இரண்டாவது அனுபவ அறிவு அல்லது பட்டறிவு என்று சொல்லலாம்.**


இரண்டாவது குறும்பட விழாவிற்கென்றே சுமதி ரூபன் 'மனமுள்' என்ற குறும்படத்தை தயாரித்தது போலவே இம்முறை மேடை, வானொலி, திரைப்படம், தொலைக்காட்சிக் கலைஞர் K.S பாலச்சந்திரனின் இயக்கத்திலும் மதிவாசனின் தொகுப்பிலும் இணைந்து 'வாழ்வு எனும் வட்டம்' என்ற குறும்படத்தை தயாரித்திருந்தனர். இப்படிப் பட்ட குறும்படங்களுக்கும் அதனை மக்களிடையே கொண்டு வரும் குறும்படவிழாவின் முக்கியத்துவத்திற்கு அவர்கள் தரும் மதிப்பையும் எடுத்துக் காட்டுகின்றது.

## குறும்பாடங்கள்

குறும்படங்கள் தயாரிப்பதற்கு முக்கியமாக துணிவு இருந்தால் போதும் என்று றஞ்சித் ஜோசப் விழாவில் எடுத்துச் சொன்னது ஆர்வமும் ஆற்றலும் இருந்தும் நேரமின்மை, பணச் செலவு போன்றவற்றை நொண்டிச் சாட்டாக வைக்கும் முதுகெலும்பில்லாத வர்களையும் நிமிர்ந்து உட்கார வைத்த பாடமது.

விழா முழுநாளும் எடுத்ததனால் பார்வையாளர்களுக்கும் அதில் திரையிடப்பட்ட குறும்படங்களில் சிறந்த படங்களை தெரிவு செய்ய அமர்த்தப்பட்ட தெரிவுக் குழுவினர்களுக்கும் களைப்பையும் மனச் சோர்வையும் கொடுத்திருக்கும்.

தமிழர்களின் தயாரிப்புகளுக்கு ஊக்கம் கொடுப்பதற்காக திரையிடப்பட்ட ஒருசில படங்கள் பார்வையாளர்களாக வந்திருந்த சிறுவர்களுக்கு உகந்ததல்ல என்ற முறையில் அமைந்திருந்தமை இனிவரும் காலங்களில் தவிர்க்கப்படும். விழாவில் வந்திருந்த பல இளம்வயதினர் பொறுமை இழக்காமலும்



பார்வையாளர்களுக்கு இடைஞ்சலாக இல்லாத வகையிலும் அடுத்த விழாக்களில் நடவடிக்கை எடுக்கப்படும்.

விழாவில் திரையிடப்பட்டவற்றில் சில படங்களே விருது பெற்றதாக அறிவிக்கப் பட்டாலும் திரையிடப்பட்ட அனைத்துப் படங்களுமே மக்களால் பார்க்கப்பட்டு பாராட்டப்பட்டபோதே எல்லாப் படங்களுமே விருதுபெற்றவைகளாகி விட்டன என்பதை தயாரிப்பில் ஈடுபட்ட அனைவருமே மனதில் கொள்ளவேண்டும். விருது கிடைக்கவில்லை என்பதற்காக இப்படிப்பட்ட குறும்பட விழாக்களை கொச்சைப்படுத்துபவர்களும், நல்ல விமர்சனங்களைக்கூட நக்கலாக எடுத்து விமர்சித்தவர்களை பகைமை பாராட்டுபவர்களும் தெரிந்து கொள்ளவேண்டிய முக்கிய விடயம் எதையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் எமக்கு வேண்டுமென்பதே.

நாங்கள் முக்கியத்துவம் கொடுப்பதே குறும்படங்களுக்குத் தான் என்பதை மனதில் கொண்டு குறும்படங்களை விட தயாரிப்பவர்களோ குறும்பட விழா அமைப்பாளர்களோ முக்கியமாகி விட முடியாது என்பதை எல்லோரும் தெரிந்து கொள்வோம்.

குறும்பட விழா அமைப்பது குறும்படத் தயாரிப்புகளைத் தட்டிக்கொடுத்து முயற்சிகளை வரவேற்பதற்காக மட்டுமே. ஆக்கபூர்வமான விமர்சனங்களை சாதாரண மனிதன் எப்போதும் நன்றியுடன் ஏற்றுக் கொள்வான்.

சிந்தனை தொடரும்

பரம் ஜி

ஒரு சாதாரண மனிதன்

# பிராமிக் கல்வெட்டுக்கள்...

*சென்ற இதழ் தொடர்ச்சி*

தமிழ் நாட்டின் வாணிகப்பெருக்கம் சங்க கால கட்டத்தில், வடமேற்கே ரோமானிய பேரரசையும், தெற்கே இலங்கையும், கிழக்கே மலேயா, தாய்லாந்து என தன் எல்லைகளை நீட்டியிருந்தது. எகிப்தில் சமீபத்தில் நடந்த புதைபொருள் ஆராய்வில், தமிழ் ப்ராஹ்மி எழுத்துக்கள் கீறப்பட்டிருந்த பானை உடைசல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழ் பெயர்கள் காணப்படுகின்றன. கிரேக்க மொழியில் எழுதப்பட்டுள்ள கி.பி. இரண்டாம் நூற்றாண்டு ஆவணம் ஒன்று வியன்னா அரும்பொருள் காப்பகத்தில் உள்ளது. அது முசிரியிலிருந்து அலெக்ஸாண்ட்ரியாவுக்கு பொருள் ஏற்றுமதி செய்வதற்கான ஒப்பந்தம் என ஆராய்ந்து அறியப்பட்டுள்ளது. முடிவில், சுருக்கமாக, தமிழ் நாட்டில் எங்கும் ப்ராகிருத மொழி பேசும் கல்வெட்டுக்கள் அக்காலகட்டத்தில் காணப்படவில்லை. மாறாக கன்னடம், தெலுங்கு மொழி பேசும் பிராந்தியங்களில் காணும் கல்வெட்டுக்கள் ப்ராகிருதமொழியிலேயே காணப்படுகின்றன. தமிழ் நாடு வந்த ஜைனர்கள் தமிழ் கற்க வேண்டிய கட்டாயம் எற்பட்டது போல அல்லாது, தென்னிந்தியாவின் வடபகுதிகளில் ஜைனர்கள் ப்ராகிருத மொழியிலேயே செயல்பட முடிந்துள்ளது. கன்னட மொழியில் முதல் இலக்கிய வெளிப்பாடு 9-ம் நூற்றாண்டு கவிராஜ மார்க்கமாகவும், தெலுங்கில் 11-ம் நூற்றாண்டு நன்னய்யனின் மகாபாரதமாகவும் இருந்தன. தமிழ் நாடு சிற்றரசுகளால் ஆளப்பட்டாலும், அவர்கள் சுதந்திர அரசுகளாக இருந்தனர். பலமான பரந்த நிர்வாக கட்டமைப்புகள் இருந்தன. தமிழ் அரசு மொழியாக,மக்கள் மொழியாக, இலக்கிய மொழியாக, சமூகம் சகல மட்டங்களிலும் கல்வி பெருக்கம் கொண்டதாக இருந்த காரணங்களால், தமிழ் நாட்டுக்கு ப்ராகிருத மேலாண்மையின் தேவை இருக்கவில்லை. இவை அரசியல் மேடைப்பேச்சுக்களில் வெற்றுப்பெருமையின் முரசொலி அல்ல. கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.ஆறாம் நூற்றாண்டு வரைய தமிழ் ப்ராஹ்மி கல்வெட்டுக்கள் தரும் சாட்சியம். வெங்கட் சாமிநாதன் இக்கல்வெட்டுக்கள் ஒன்றிரண்டு வரிகள் அல்லது வாக்கியங்களே கொண்ட மிகச் சிறிய சாசனங்களால் ஆனவை. பெரும்பாலும் மனித நடமாட்டமற்ற மலைக்குகைகளில், பாறைப்பிளவுகளில் காணப்படுபவை. இக்குகைகள் ஜைன புத்த பிக்குகளுக்கான தங்குமிடமாக அமைந்தவை. எகிப்தில் சமீபத்தில் நடந்த புதைபொருள் ஆராய்வில், தமிழ் ப்ராஹ்மி எழுத்துக்கள் கீறப்பட்டிருந்த பானை உடைசல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழ் பெயர்கள் காணப்படுகின்றன.

- வெங்கட் சாமிநாதன்




வீட்டில் - முதலீடு வீண்விரயமாவதில்லை....
வீட்டில் - முதலீடே எம் வாழ்க்கைக்கு மூலதனம்!
பாதுகாப்பாக உங்கள் பணத்தை வீட்டில் முதலிட்டு
வாழ்க்கையில் வெற்றிபெற அழையுங்கள் பரம். ஜி
பாடுபட்டு உழைத்த பணத்தை வீடுகளில்
முதலிடும் வழிகளை அறிய நாடுங்கள்
**Param Gnana**
Sales Representative
HomeLife GTA
Realty Inc.
www. themathuram.com
Cell: 416 230 1107 Bus: 416 321 6969
Res: 905 670 9969 (Mississauga)
HOMELIFE HIGHER STANDARDS
themathuram.com

# ஒலிம்பிக்ஸ் - 2004

| Rank by Gold | Noc Name | Gold | Silver | Bronze | T |
|---|---|---|---|---|---|
| 1 | United States | 35 | 39 | 29 | 1 |
| 2 | Russia | 27 | 27 | 38 | 9 |
| 3 | China | 32 | 17 | 14 | 6 |
| 4 | Australia | 17 | 16 | 16 | 4 |
| 5 | Germany | 14 | 16 | 18 | 4 |
| 17 | Canada | 3 | 6 | 3 | 1 |

வாழ்த்தொலி முழங்க கிரீஸ் நாட்டின் தலைநகர் ஏதென்ஸ் இல் Aug. 13ஆம் திகதி 28வது ஒலிம்பிக்ஸ் தொடங்கியது யாவரும் அறிந்ததே. இதில் 202 நாடுகளைச் 10,514 வீரர்கள் 37 வகையான போட்டிகளில் போட்டியிட்டனர். 1896ஆம் ஆண்டு இதே ஏதென்ஸ் நகரில் பனத்தனைக்கன் என்ற புகழ் பெற்ற மைதானத்தில் முதலாவது ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன.
கி.மு 776ஆம் ஆண்டில் புகழ்பெற்ற கிரேக்க வீரரும் பலசாலியுமான ஹேக்குலியஸ், உலகின் மிகப் பலம் பெற்ற மனிதன் யார் என்ற போட்டிக்காக தனது சொந்த சகோதரர் களுக்கெதிராக போட்டியிட அழைப்பு விடுத்ததே இந்த ஒலிம்பிக் போட்டியின் ஆரம பம் என்கிறது வரலாறு. அப்போது ஆட்சியில் இருந்த மன்னன் இந்தப் போட்டியை கிரேக்கர்கள் நம்பும் ஒலிம்பியா தேவதையின் ஆணையுடன் ஆரம்பித்து வைத்ததால் ஒலிம்பிக் என்ற பெயர் இடப்பட்டது. நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் இப்போட்டிகளில் 2004 இல் இடம் பெற்ற சுவையான அம்சங்களை இங்கு பார்ப்போம்.

**சீனாவின் சாதனை!!**




28வது ஒலிம்பிக்ஸ் பல ஏற்றத்தாழ்வுகளைச் சந்தித்தபோதும், சீனாவின் விஸ்வரூபம் அனைத்து நாடுகளையும் ஆச்சரியப்படுத்தி யுள்ளது என்றே கூறலாம். சீனா 32 தங்கம், 17வெள்ளி, 14வெண்கலம் என்று மொத்தம் 63 பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.

அடுத்த ஒலிம்பிக்கை நடத்த உள்ள நிலையில் இந்தப் பதக்க அறுவடை சீனா வுக்கு மிகப் பெரிய ஊக்கத்தை அளித்துள் ளது என்றே கூறலாம். 103 பதக்கங்களுடன் முதலிடத்தில் உள்ள அமெரிக்காவே பயப்ப டும் அளவுக்கு விளையாட்டில் வல்லரசாக சீனா உருவாகிக் கொண்டிருக்கிறது. சீனா 2000ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக்கில் 28 தங்கம், 16 வெள்ளி, 15 வெண்கலத்துடன் மொத்தம் 58 பதக்கங்களைப் பெற்றது. ஏதெ ன்ஸில் 20 தங்கம் கிடைக்கும் என்று எதிர் பார்ப்புடன் வந்த சீனா, தன்னுடைய திறமை யைக் கண்டு பெருமிதம் கொண்டுள்ளது.

மற்ற நாடுகளைப் போல் அல்லாமல், உலகச் சாம்பியன், நடப்பு ஒலிம்பிக் சாம்பியன் போன்றவர்களை அனுப்பாமல், புதிய இளமைப் பட்டாளத்தை அனுப்பியது. ஏதென்ஸில் மற்றொரு குறிப்பிடத்தக்க மாற்றம் சீனா தனது வழக்கமான வலுவான பிரிவுகளில் மட்டுமல்லாமல் மற்றப் பிரிவுகளிலும் பதக்கம் வென்றதுதான். மொத்தம் 12பிரிவுகளில் தங்கம் வென்ற சீனா, மேலும் 6 பிரிவுகளில் வெள்ளி மற்றும் வெண்கலத்தை வென்றுள்ளது.

**ஏதென்ஸ் ஒலிம்பிக்ஸ் போட்டி**

100மீ ஓட்டப்பந்தயத்தில் அமெரிக்க வீரர் சாம்பியன்.
ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான 100மீ ஓட்டப்பந்தயத்தில் அமெரிக்க வீரர் ஜஸ்டின் கட்லின் சாம்பியன் பட்டம் வென்றதுடன், இப்பட்டத்தை வென்ற 22வயது இளம் வீரர் என்ற பெருமையையும் பெற்றிருக்கிறார். இந்த தூரத்தை 9.85 வினாடிகளில் கடந்து முதலிடம் பெற்று தங்கத்தை கைப்பற்றினார். போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த பிரான்ஸிஸ் ஒபிக்வெறு இந்த தூரத்தை 9.86 வினாடிகளில் கடந்து இரண்டாவதாக வந்து வெள்ளிப்பதக்கத்தை வென்றார். இது ஐரோப்பிய சாதனையாகும். அமெரிக்க வீரர் கட்லின் இப்பட்டம் வென்றதுடன், கடந்த 10 வருடங்களில் இப்பட்டத்தை வென்ற இளம் வீரர் என்ற பெருமையை பெற்றிருக்கிறார்.

2000ஆம் ஆண்டு ஒலிம்பிக் சாம்பியனான மௌரீஸ் கிரீன் 9.87 வினாடிகளில் கடந்து மூன்றாவது இடத்தையே பிடிக்கமுடிந்தது. இறுதிப்போட்டியில் பங்குகொண்ட வீரர்களில் 5பேர் 100மீ தூரத்தை 10வினாடிகளுக்கும் குறைவாக கடந்து சாதனை படைத்துள்ளனர்.

பெண்களுக்கான மரதன் போட்டியில் இங்கிலாந்து வீராங்கனை பவுலாராட்கிறிப் தங்கத்தை கைப்பற்றினார். இவர் இப்பிரிவில் உலக சாதனையாளராவார். இப்போட்டியில் ஜப்பான் வீராங்கனை மிஜுக்கி நொருகியே 35கிமீ தூரம் வரை முன்னணியில் இருந்தார். அதன்பிறகு பவுலா, ஜப்பான் வீராங்கனையை

## எஸ். கணேஷ்

பின்னுக்கு தள்ளி முதலிடம் பிடித்தார்.
ஜப்பான் வீராங்கனை பெண்கள் மரதன் போட்டியில் சிறப்பாக பங்கேற்றது ஜப்பானிய ரசிகர்களுக்கு பெரும் மகிழ்ச்சியை அளித்துள் ளது. 30 வயதான ராட்சிளிப் பெய்ஜுங்கில் 2008ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பி க்ஸ் போட்டியிலும் பங்கேற்க வாய்ப்புள்ளது.

**ரோஜர் ஃபெடரர் அதிர்ச்சித் தோல்வி**

ஏதென்ஸ் ஒலிம்பிக் ரென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் உலகின் முதல்தர வீரரான சுவிஸ்சலாந்தின் ரோஜர் ஃபெடரர் 2வது சுற்றில் அதிர்ச்சி தோல்வியுற்றார். 2வது சுற்று ஆட்டத்தில் செக் குடியரசின் தாமஸ் பெர்டிச்சிடம் தோல்வியுற்றார்.

உலகத்தரவரிசையில் 74வது இடத்தில் உள்ள பெர்டிச் முதல் செட்டில் தோல்வியடைந்தாலும், உலகின் முதல்தர வீரருடன் விளையாடுகிறோம் என்ற அச்சம் இல்லாமல் விளையாடினார். அடுத்த இரண்டு செட்களை கடுமையாகப் போராடி வென்றார்.

**ஒலிம்பிக் ரென்னிஸ் போட்டி**

சிலி வீரர் நிக்கோலஸ் தனிநபர் பிரிவில் சாம்பியன்
ஏதென்ஸ் ஒலிம்பிக்ஸில் ஆண்களுக்கான தனிநபர் ரென்னிஸ் போட்டியில் சிலி நாட்டைச் சேர்ந்த நிக்கோலஸ் மஸ்சு தங்கப்பதக்கத்தை வென்றார்.

இறுதிப்போட்டியில் நிக்கோலஸ், அமெரிக்க வீரர் மர்டிபிஷ்டன் பட்டத்தை கைப்பற்ற மோதினார். நிக்கோலஸ் ரென்னிஸ் போட்டியில் தனிநபர் பட்டம் வென்று ஒலிம்பிக்கில் சரித்திரம் படைத்தது சிலி நாட்டு ரசிகர்களுக்கு பெரும் மகிழ்ச்சியை அளித்தது. அவர்கள் இதனை கோலாகலமாக கொண்டாடினர். தனிநபர் போட்டி நடைபெற்றதற்கு முன்னதாக 16 மணிநேரத்திற்கு முன்பாக நிக்கோலஸ், மற்றொரு வீரரான பெர்னாண்டோ கான்சலெஜ்ஜுடன் இணைந்து இரட்டையர் பட்டத்தை வென்றது குறிப்பிடத்தக்கது. இரட்டையர் போட்டியில் 5செட் ஆட்டத்தில் நிக்கோலஸ் வென்று தங்கப்பதக்கத்தை பெற்றார். ஒலிம்பிக்ஸ் போட்டியில் சிலி நாடு இதுவரை தங்கம் பெற்றதே கிடையாது. இதுவே முதலாவது தங்கப்பதக்கமாக அமைந்தது.

முன்னதாக நடந்த இரட்டையர் போட்டி நான்கு மணிநேரம் நடந்தது. இதில் நிக்கோலஸ் ஜோடி முதல் இரண்டு செட்டை வென்றது. அடுத்த செட்டை எதிர வென்றது. 4வது செட்டை நிக்கோலஸ் ஜோ கைப்பற்றியது. அரையிறுதியி சோன்ஜவெஜ், அமெரிக்க வீரர் மர்டியிட தோல்வியடைந்தார். பின்னர் அமெரிக்க வீ ரெய்லரை வென்று வெண்கலத்தை பெற்றா நிக்கோலஸ் இந்த ஒலிம்பிக்ஸில் சி நாட்டிற்கு மூன்று பதக்கத்தை பெற்று தந்திருக்கிறார். இரண்டு தங்கம் மற்றும் ஒ வெண்கலம் அவர் வென்ற பதக்கங்களாகு தனிநபர் பிரிவில் நிக்கோலஸ் 100 போட்டியில் பங்கேற்பது போல அதிவிரைவா ஆடினார் என்றால் அது மிகையாகாது. முத செட்டின் முதல் 5 ஆட்டங்களில் வென் முதல் செட்டை 6-3 என்ற கணக்கி கைப்பற்றினார். அமெரிக்க வீரர் பிஷ் அடுத் இரண்டு செட்களை வென்றார். நிக்கோல போராடி 4வது செட்டை 6-3 என்ற கணக்கி வென்றார். இறுதி செட் ஆட்டமும் மிகவு பரபரப்பாக இருந்தது. 8வது ஆட்டத்தி நிக்கோலஸ் மீண்டும் மர்டியின் சர்வீனை முறியடித்து ஆட்டத்தை தனது வசமாக்கினா

## உலக சாதனையுடன் தங்கம் வென்றார் ரஷ்ய வீராங்கனை

ஏதென்ஸ் ஒலிம்பிக்ஸ் தடகளப் பிரிவில் முத உலகச் சாதனையுடன் தங்கம் வென்றா ரஷ்யாவின் போல்-வால்ட் வீராங்கனை எலீன இஸின்பயேவா. 4.81மீட்டர் உயரம் தாண் சமீபத்தில் உலகச் சாதனை படைத்திருந் 22வயதாகும் எலீனா, முதலில் 4.70 மீட்டரும அதற்கடுத்த வாய்ப்பில் 4.75 மீட்டரு தாண்டினார். கிட்டத்தட்ட வெண்கல பதக்கத்துக்காக அவர் போட்டியி வேண்டியிருக்கும் என்று கருதப்பட்டது அதற்கடுத்து 4.80 மீட்டர் உயரம் தாண்டினார் பின்னர் 4.85 மீட்டர் உயரம் தாண்டினார் கடைசி வாய்ப்பில் 4.91 மீட்டர் உயரம் தாண் தனது உலக சாதனையை முறியடித்ததுட தங்கமும் வென்றார் எலீனா.

ரஷ்யாவின் ஸ்வெத்லானா ஃபியோபனோவா 4.75 மீட்டர் உயரம் தாண்டி வெள்ளியும் போலந்தின் அன்னா ரோகௌஸ்கா 4.7 மீட்டர் உயரம் தாண்டி வெண்கலமும் வென்ற னர். இப்போட்டியில் சிட்னி ஒலிம்பிக்ஸில் தங்கம் வென்ற அமெரிக்காவின் ஸ்டேச தகுதி சுற்றிலேயே தோல்வி அடைந்தார்.

**முதல் தங்கத்தை பெற்றது இஸ்ரேல்**

ஒலிம்பிக்கில் இஸ்ரேல் முதல் தங்க பதக்கத்தை கைப்பற்றியது.
ஏதென்ஸில் புதன்கிழமை நடைபெற்ற பாய்மரப் படகுப் போட்டியில் கால் ஃபிரிட்மான முதலிடம் பெற்று இஸ்ரேலுக்கு தங்க பெருமை தேடித் தந்துள்ளார்.



1952இல் முதன்முதலாக ஒலிம்பிக்கில் நுழைந்த இஸ்ரேல், 40 ஆண்டுகளுக்குப் பிறகு பார்சிலோனா போட்டியில் முதல் பதக்கத்தை பெற்றது. கால் பிரிட்மான் வென்றது 2வது பதக்கமாக அமைந்துள்ளது.

# பயங்கர மனநோயாளிகள்...

என்பது இவர்களுக்கு இருக்கவே முடியாது. நீண்ட காலத்திற்கு ஒரே வேலையையும் செய்வது இவர்களுக்கு கடினமாய் இருக்கும். புதிய நபர்களால் நன்மை அதிகம் என்று கருதினால் உங்களை கைவிட்டு அடுத்த இடத்திற்கு தாவி விடுவார்கள்.

அன்பு என்றால் என்ன என்று இவர்களுக்குப் புரியாது. குழந்தைகளுக்குக் கூட அன்பைக் கொடுக்க முடியாதவர்கள் (ஆனால் அன்பைச் சொரிவது போல மிக அழகாக நடிப்பார்கள்). ஆதனால் இவர்களுக்கும் உண்மையான அன்பு கிடைப்பது வெகு அரிது. அரசியல் மற்றும் மதத் தலைவர்களாக பல Psychopath கள் இருக்கின்றார்கள். தம் வழி தொடர்பவர்கள் ஏதாவது காரியத்தில் வெற்றியடையாமல் போனால் அதை ஒரு பெரும் குற்றமாக உணரும்படி செய்து விடுவார்கள். தன்னைப் பின் தொடர்பவர்களின் விசுவாசத்தில் இவர்களுக்கு எப்போதும் சந்தேகமே இருக்கும். பின் தொடர்பவர்களின் விசுவாசத்தை அடிக்கடி பரிசோதித்துப் பார்த்துக் கொண்டே இருப்பார்கள். அது கடுமையான, இரக்கமற்ற, கரடுமுரடான வழிகளாக இருக்கும்.

கடுமையான சட்டங்கள், தண்டனைகளை தனது சீடர்களுக்கு வழங்குவது இவர்களுக்கு பெரும் சந்தோசமான காரியம். வார்த்தைகளால் கீறுவது மட்டுமல்ல கத்தியால் கீறுவதும் இவர்களுக்கு பெரும் கிளர்ச்சியை உண்டு பண்ணக் கூடிய விருப்பமான விடயமாகும். தமது திட்டத்திற்கு மாறாக ஏதாவது பிழைகள் நடந்து விட்டால் அதற்குக் காரணம் தான் என்று ஒருபோதும் இந்த Psychopath கள் நினைக்கவே மாட்டார்கள். 'இந்த விடயம் பிழைத்ததற்குக் காரணம் மற்றவர்களே' என்று எப்போதும் குற்றம் சாட்டுவார்கள்.

முறையின்றி கண்டபடி பால் உறவு கொள்கின்ற விருப்பமும், பாலியல் வன்முறைகள் செய்வதிலும் பெரும் விருப்பம் இவர்களுக்கு இருக்கும். ஆனால் தன்னை வழிபடுபவர்களுக்கு காதல், பாலியல் தொடர்பாக கடுமையான கட்டுப்பாடுகளையும், சட்ட திட்டங்களையும் வகுத்திருப்பார்கள்.

இவர்களின் இளமைப்பராயம் எப்படி இருந்திருக்கும்? என்று கேள்வி எழலாம்.

சிறு வயதிலேயே 'வலி'க்குப் பயப்பட்டிருக்க மாட்டார்கள். சிலர் சிறு பராயத்தில் சிறிய விலங்குகளை சித்திரவதை செய்து இன்பம் அனுபவித்து இருப்பார்கள். பாடசாலைக்கு அடிக்கடி 'கட்' அடித்திருப்பார்கள். வீட்டை விட்டு ஓடிப்போயும் இருப்பார்கள். மது அருந்தல், புகைத்தல் பழக்கங்கள் மிக இள வயதிலேயே இவர்களுக்குத் தொற்றி இருக்கும். இவர்களுக்குத் தண்டனை வழங்கியே பெற்றோர்கள் களைத்துப்போய் 'இனி இவன் (இவள்) திருந்த மாட்டான்(ள்)' என்று கைவிட்டுவிடப்பட்டிருப்பார்கள்.


இதுவே இவர்கள் தமது வழியில் தொடர்ந்து செல்லக் காரணமாக அமைந்து விட்டிருக்கும்.

ஒரு கனேடிய தொலைக்காட்சியின் Psychopath தொடர்பான நிகழ்சியின் போது பேட்டி அளித்துக் கொண்டிருந்து உளவியல் நிபுணரிடம் ஒரு கேள்வி முன்வைக்கப்பட்டது.

'கனடாவின் பிரதமராக ஒரு Psychopath ஆல் வரமுடியுமா' என்பதுதான் அந்த சிக்கலான கேள்வி. மில்லியன் கணக்கான கனேடிய மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது அவருடைய பதில்.

எந்தவித தயக்கமும் இல்லாமல் அந்த உளவியல் நிபுணர் அளித்த அந்த அதிர்ச்சியான பதில் 'ஆம் கனடாவின் பிரதமராக ஒரு Psychopath ஆல் வரமுடியும்.

# 2005ஆம் ஆண்டு வாடகை அதிகரிப்பு 1.5%




அடுத்தவருடம் (2005 ஆம்) ஆண்டின் வாடகை அதிகரிப்பு 1.5% ஆக இருக்கும் என Ministry of Municipal Affairs and Housing அறிவித்துள்ளது. எனவே அதிகரிப்பு ஆகக்கூடியதாக 1.5% ஆக இருக்க வேண்டும். ஆனாலும் இதனைவிடக் அதிகமாக அதிகரிக்கக் கூடிய சந்தர்ப்பமும் இருக்கும் என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்வது நல்லது. கட்டிடங்களில் மேலதிக வேலை செய்யவேண்டியிருப்பின் வாடகையில் மேலதிக அதிகரிப்பு ஏற்படுத்த சட்டம். இடம் கொடுக்கின்றபோதும், 1.5%இற்கு மேலதிகமாக, வீட்டுச் சொந்தக்காரர் வாடகையை அதிகரிக்க விரும்பினால் Ontario Rental Housing Tribunal இல் அனுமதியைப் பெற்றே அதிகரிக்க வேண்டும். புதிய வாடகை அதிகரிப்பு January 01, 2005 இலிருந்து December 31, 2005 வரை நடைமுறையில் இருக்கும். இதுவரையில் இந்த அதிகரிப்பே மிகக் குறைவானதாக இருப்பதாக "Tenants Groups" தெரிவித்துள்ளது.

இதனால் சில தீமைகள் இருப்பதாகவும், அவதானிகள் தெரிவிக்கின்றார்கள். வாடகை கட்டிடங்களை பராமரிப்ப தற்கும், கார் தரிப்பு இடங்களிற்குரிய தகுந்த முறையில் மெருகுபடுத்துவதற்குரிய செலவுகளையும் கட்டிடத்தின் எதிர் காலத்தை நீடிப்பதற்கான திட்டங்களையும் நிறுத்த வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். இதனால் பொருளாதாரத்திலும் மந்தகதி ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படலாம். வாடகை கட்டிடங்களை நிர்மாணிப்பவர்களும், புதிதாக தொடங்க இருக்கும் கட்டிடங்களை தற்காலிகமாக நிறுத்தக்கூடிய நிலைமை தோன்றலாம். அந்தநிலைமை ஏற்பட்டால் எதிர்காலத்தில் வாடகை அதிகமாக அதிகரிக்கலாம்?

Rental Vacancy வீதம் 5% ஆக இருக்கும். இத்தருணத்தில் 1.5% அதிகரிப்பு பெரிதாக ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்தாது என Housing Analyst, Will Dunning தெரிவித்துள்ளார். அதிக கட்டிடங்கள் புதிது புதிதாக வாடகைக்கு வருவதால் வாடகைக்கு இருப்பவர்களிற்கு நல்ல சந்தர்ப்பமாக கருதப்படுகின்றது. சில பகுதிகளில் வாடகை 15% தொடக்கம் 20% வரை இறங்கியுள்ளதையும் காணலாம். சில கட்டிடங்களில் வாடகைக்கு எடுப்பவர்களிற்கு ஒன்று அல்லது இரண்டு மாத வாடகை இலவசமாகப் பெறக்கூடிய வசதிகளும் ஏற்பட்டுள்ளது.

தரப்பட்ட அட்டவணையிலிருந்து வாடகை அதிகரிப்பு எவ்வாறு மாறி வருகின்றது என்பதனைக் காணக்கூடியதாக உள்ளது. கடந்த 30வருடங்களில் அடுத்த வருட வாடகை அதிகரிப்பே மிகக் குறைவானதாகக் காணப்படும்.


WEDNESDAY, AUGUST 18, 2004 ★ TORONTO STAR ★ A19

High vacancy rate slows rental increases

The vacancy rate in Toronto is currently 4.77%, up 27% since 2003. The rental increases allowed for 2005 are at their lowest point in 30 years.



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 2-3 வருட Condo. கட்டிடங்களில் இலகுவாக வாடகைக்கு கொடுக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. இதற்கு பல காரணங்களும் உண்டு. இவற்றில் Washer, Dryer, Central Air ஐ முக்கிய காரணமாகக் கொள்ளலாம். மற்றும் Board rooms, Game rooms, Gym. போன்றவற்றையும் காரணமாகக் கொள்ளலாம். இதனால் புதிதாக திருமணம் செய்பவர்கள், இருவர் சேர்ந்து வாழ்பவர்கள் இப்படியான வாடகை Suitesகளையே தமது முதல் தெரிவாகக் கொள்கின்றார்கள். பொதுவாக புதிதாக நிர்மாணிக்கப்படும், அல்லது 5 வருடங்களிற்கு உட்பட்ட கட்டிடங்களின் வாடகை அளவு கோலை கீழே காணலாம். இந்த அளவு ஒரு சதுரஅடிக்கு எவ்வளவு என்று தரப்பட்டுள்ளது.

## நாமும் நமது இல்லமும்
## ராஜா மகேந்திரன்


Yonge & 401 - Bayview பகுதியில்சதுரஅடிக்கு $1.80 தொடக்கம் $2.15 வரை.
Queens Way - Lake front பகுதி வாடகை - $2.10 தொடக்கம் $2.15வரை


உதாரணமாக SKY DOME பகுதியில் $2.15சதுரஅடி
(600 சதுரஅடி Unit ஆக இருந்தால்)
வாடகை = $1290 ஆக இருக்கும் (2.15 x $600)




### Interest Rate

| | |
|---|---|
| 5 Yrs Mortgage | 5.40% |
| 3 Yrs Mortgage | 4.70% |
| Prime Rate | 3.75% |
| Bank Rate | 2.00% |


**Finch/Middlefield**

**$329,900**
Detached
3 Bedrooms
3 Washrooms
renovated

**Neilson/Sheppard**

**$229,900**
Semi Detached
4 Bedrooms
Sep. Entrance
3 Washrooms

**Morningside/Finch**

**$337,900**
Detached
4+2 Bedrooms
Sep. Entrance
2 Kitchens

**Markham/Denision**

LEASE TO OWN
**$1300.00**
Detached
3 Bedrooms
3 washroom
3 Yrs Old

**Bellamy/Lawrence**

**$293,000**
Detached
bungalow
3+2 Bedrooms
sep. entrance
2 Kitchen

**Neilson/McNicoll**

Sold
**$345,900**
Detached
4 Bedrooms
3 Washrooms

**McCowan/14th Ave**


Sold
**$434,900**
Brand New
5 Bedrooms
4 Washrooms
1 Kitchens


**Sheppard/Allen**


**$189,900**
Condo Apt.
2 Bedrooms
2 Washrooms
5 Yrs Old

**Neilson/Sheppard**

**$178,000**
Townhouse
3 Bedrooms
2 Washrooms
1 Kitchen


**McCowan/Sheppard**

**$119,900**
Condo Apt.
2+1Bedrooms
2 Washrooms
Clean Unit

**Neilson/McLevin**

**$159,000**
Condo Apt.
2 Bedrooms
2 Washrooms
1 Kitchen

**Pharmacy/Lawrence**

Sold
**$339,900**
Detached
3+2+1 Bedrooms
Sep. Entrance
2 Kitchen

New Listing
**Neilson/McNicoll**

**$249,000**
Detached
3+1 Bedrooms
3 Washrooms
Sep. Entrance

New Listing
**Kennedy/Sheppard**

**$178,000**
Condo Apt.
3+1 Bedrooms
2 Washrooms

**Markham/Sheppard**

**$292,900**
4+1 Bedrooms
3 Washrooms
2 Kitchen
4 Level Split

Warden/Finch
One Bedroom Condo
For SALE

HOMELIFE HIGHER STANDARDS
ராஜா மகேந்திரன்
Broker/Owner
Cell: 416-315-9397
Off : 416-321-6969

HOMELIFE/GTA Realty Inc. 1711McCowan Rd, Suite 206, Toronto, ON M1S-3Y3

# Neelam Silk

சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

# நீலம் சில்க்



- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAPAN CRYSTAL SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE

பட்டுத் தெரிவுகள் அனைத்துக்கும்

## "நீலம் சில்க்"

T.P: 416-778-7455
Fax: 416-778-8484
1453 GERRARD STREET, EAST
(INDIAN BAZZAR)

T.P: 416-759-2002
2378 EGLINTON AVE., E.
(Kennedy Rd. & Eglinton Ave, Scar.)




# LARGE INDOOR PUBLI
# CAR AUCTION

EVERY WEDNESDAYS EVENING
STARTING AT 7:00 PM - VIEWING FROM 9:00 AM

## 100+ VEHICLES ON DISPLAY INDOORS

INCLUDE MANY LATE MODEL
- G.M. • FORD
- CHRYSLER • HONDA
- NISSAN • TOYOTA
- V.W:, & OTHER FOREIGN & DOMESTIC VEHICLES



BANK REPOSSESSIONS, BAILIFF SEIZURES, BANKRUPTCIES, OFF LEAS VEHICLES, CONSIGNMENTS ETC.




WEEKLY CASH BUYERS DRAWS OPEN
MONDAY - FRIDAY 9:00 AM TO 6:00PM

FOR VIEWING: SATURDAY 10:00 AM TO 4:00 PM

CIA PUBLIC AUTO AUCTION & SALES
416 - 242 - 5052
www.cialeasing.com

1032 MARTIN GROVE ROAD, ETOBICOKE, O



16 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

# யோகாஸ்

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 155

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | | | 4 |
| | | | | 5 | | 6 | |
| | | | | | | | |
| | | 7 | | | 8 | | |
| | | | | | | | |
| | 9 | | | | 10 | | |
| | | | | | 11 | | |
| 12 | | | | 13 | | 14 | |

**இட - வல**

1. தமிழீழத்தில் ஒரு நகரம்
4. ஒழுங்கு(வல-இட)
5. நண்பன்
7. சாதாரணம்
8. குளம்
9. பத்திரம்
11. விரி (வல-இட)
12. உத்தேசம்
14. வாகனம் (வல-இட)

**மேல் - கீழ்**

1. ஒருவகை சிப்பி
2. கணப்பொழுது
3. சிறிய பெட்டி
4. மரக்கறி ஒன்று
6. இடம் ( கீழ்-மேல்)
10. விடுகதை
12. ஐரோப்பிய நாணயம் (கீழ்-மேல்)
13. சாமி (கீழ்-மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ம | ட் | ட | க் | க | ள | ப் | பு |
| டை | | ந | | ட | வி | | டை |
| ப் | | | ரி | க | | து | வை |
| ப | க் | கு | வ | ம் | | டை | |
| ள் | | ண | | | ∴ | | ம் |
| ளி | | ம் | ப | சு | | | ன |
| | ப | | | க | | தி | வ |
| ம | ண் | டூ | க | ம் | | கு | பு |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் September 28, 2004க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**154இல் வெற்றி பெற்றோர்**
1) T. Suthakaran , Toronto
2) M. Chinniah, Scarborough

- ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
- அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
- வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**(416) 267-0408** 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]



mhc

# MOHAN
## HOMEOPATHIC CLIN
## & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-302**


5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

# நீரிழிவு நோயாளிகளுக்கு கால்கள் ஏன் துண்டிக்கப்படுகின்றன?

## Diabetes II

செழியன்

தாக்குதலுக்கான வாய்ப்பைப் பார்த்து தேடி அலைகின்ற தற்கொலைப் போராளியைப் போல நீரிழிவு நோயும் தனது தாக்குதல் திட்டத்துடன் அலைகின்றது என்றதும் பெரும் பீதி உங்களுக்கு ஏற்படலாம்.



தற்கொலைக் குண்டுதாரி உங்களைக் குறிவைத்துவிட்டால் அதில் இருந்து உங்களால் மீளவே முடியாது. ஆனால் சலரோக வருத்தத்தின் தாக்குதல் திட்டத்தில் இருந்து நீங்கள் மனம் வைத்தால் நிச்சயமாகத் தப்பிவிடலாம். இது ஒரு தொற்று நோய் இல்லை. அது மட்டுமல்ல mad cow disease, Avian flu போன்று மாட்டு இறைச்சி, கோழி இறைச்சியை ஆசையோடு சாப்பிடுவதால் வருகின்ற நோயும் அல்ல. அனோபிலிஸ் பெண் நுளம்பு கடித்து வருகின்ற மலேரியா போல அளவுக்கு அதிகமான பிரியத்துடன் யாராவது நம்மைக் கடித்தால் வரக்கூடிய வருத்தமும் இது அல்ல. நமது உடலில் ஏற்படுகின்ற குறைபாட்டாலே த நோய் ஏற்படுகின்றது.

அப்படி என்ன குறைபாடு நமது உடலில் ஏற்படுகின்றது?

இந்தப் பூமிப் பந்தில் எல்லா இயக்கத்துக்கும் சக்தி வேண்டும். விமானம் பறக்கின்றது என்றால் பெற்றோல் போட்டுக் கொள்ள வேண்டும். புகைவண்டி ஓடுகின்றது என்றால் மின்சாரம் வேண்டும். நமது உடல் இயங்க வேண்டும் என்பதற்காக நாம் பெற்றோல் போட்டுக் கொள்ள முடியுமா? முடியாது. நமக்குத் தேவை குளுக்கோஸ். குளுக்கோசை நாம் அரிசி, மா, கிழங்குவகைகள், மற்றும் பழங்களில் இருந்து பிரதானமாகப் பெற்றுக் கொள்கின்றோம். அரிசி, மா, கிழங்குவகையில் உண்மையில் இருப்பது காபோவைதரேற்று என்கின்ற மாப்பொருள். சமிபாட்டுத் தொகுதியில் வைத்தே இந்த காபோவைதரேற்று குளுக்கோசாக சமிபாடு அடைகின்றது. குளுக்கோஸ் உணவுத் தொகுதியில் இருந்து குருதித் தொகுதிக்குள் ஏற்றப்பட்டு குருதியின் மூலம் உடலின் எல்லாக் கலங்களுக்கும் விநியோகிக்கப்படுகின்றது. கலங்களுக்கு செல்லுகின்ற குளுக்கோஸ் விநியோகத்தில் தடை ஏற்பட்டால் கலங்கள் இறந்துவிடும்.

கந்த சஷ்டி அல்லது சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் என்று ஒரு நாலு நாளைக்கு நீங்கள் கலங்களுக்கு செல்கின்ற குளுக்கோஸ் விநியோகத்தை துண்டித்தால் நிலைமை விபரீதமாகிவிடும் அல்லவா. ஆனால் நமது கலங்கள் நம்மைவிட வெகு உசாரானவை. தட்டுப்பாட்டுக் காலங்களில் பயன்படுத்துவதற்கு என்றே ஒவ்வொரு கலமும் கொஞ்சம் குளுக்கோசை பதுக்கிவைத்துக் கொள்கின்றது. கலங்களுக்கு 'சப்ளை' செய்தது போக மிகுதியாக குருதியில் உள்ள குளுக்கோசை ஈரல் தன்னுடைய சேமிப்புக் கிடங்கில் பாதுகாப்பாக சேமித்துவிடுகின்றது. கலங்களும், ஈரலும் இவ்வாறு சேமிக்கின்ற போது குளுக்கோசாகவே சேமிக்க முடியாது. எனவே இவை குளுக்கோசை கிளைக்கோசன் ஆக மாற்றியே சேமிக்கின்றன. இவ்வாறு குளுக்கோசை கிளைக்கோசனாக மாற்றுகின்ற இரசாயன வித்தையை நிகழ்த்துவது சதையத்தினால் (Pancreas) சுரக்கப்படுகின்ற இன்சுலின் (Insulin) என்கின்ற ஓர் ஓமோனே ஆகும்.

சுகதேகியான எழுபது கிலோ மனிதர் ஏறக்குறைய எழுபது கிராம் கிளைக்கோசனை (Glycogen) ஈரலிலும், இரு நூறு கிராமை தசைக்கலங்களிலும் சேமித்துவைத்துக் கொள்ள முடிகின்றது. இந்த சேமிப்பில் இருந்து உடலுக்கு 1200 கிலோ கலோரி சக்தி கிடைக்கும். இது பன்னிரெண்டு முதல் பதினெட்டு மணித்தியாலங்கள் உடல் இயங்குவதற்குப் போதுமானது. நீங்கள் தற்காலிகமாக உணவு உட்கொள்ளாமல் இருக்கின்ற போது உடல் தான் இயங்குவதற்குத் தேவையான சக்தியை இவ்வாறே பெற்றுக் கொள்கின்றது.

சாப்பிட்டு ஒரு பெரிய ஏப்பம் விட்டதும் உங்கள் வேலை முடிந்து விடும். சில மணித்துளியில் குருதியில் கிடு கிடுவென்று குளுக்கோசின் மட்டம் ஏறத் தொடங்கும். உடனடியாக குருதியிடம் இருந்து Pancreas க்கு ஒரு மின்னஞ்சல் பறக்கும் 'இன்சுலினை உடனே அனுப்பிவை ஐயா' என்று. உடனடியாக அந்தக் காரியத்தில் இறங்கிவிடுவார் Pancreas. சமயத்தில் நீங்கள் காலையில் இருந்தே சாப்பிடவில்லை என்றால் குருதியில் உள்ள குளுக்கோசின் மட்டம் 'மடமட' என்று குறையும். 'குளுக்கோஸ் இல்லையப்பா' என்று இன்னுமொரு மின்னஞ்சல் பறக்கும். உடனே கிளைக்கோஜினேஸ் (Glycogenase) என்கின்ற ஓர் ஓமோன் ஈரலில் சுரக்கப்படும். இது ஈரலின் சேமிப்புக் கிடங்கில் கிடக்கின்ற கிளைக்கோசனை குளுக்கோசாக மாற்றி குருதிக்குள் அனுப்பிவிடும்.

இவ்வாறு குருதியில் உள்ள குளுக்கோசின் அளவு ஒரு சம நிலையில் பேணப்பட்டு வருகின்றது.

ஒருவேளை 'இன்சுலினை உடனே அனுப்பிவை' என்ற மின்னஞ்சலுக்கு பதிலே இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். அல்லது தேவையான அளவு இன்சுலின் வரவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள் இந்த நிலைமையைத்தான் நீரழிவு வருத்தம் (Diabetes) என்கின்றோம். இந்நிலையில் குருதியில் இருக்கின்ற குளுக்கோஸ் கிளைக்கோசனாக மாற்றப்பட்டு சேமிக்கப்படாமல் குருதியிலேயே கைவிடப்பட்டுவிடும். அதனால் என்ன? அது அப்படியே குருதியிலேயே இருந்து விட்டுப் போகட்டுமே என்று ஒரு வேளை யாராவது நினைக்கக் கூடும். இவ்வாறு குருதியில் உள்ள அளவுக்கு அதிகமான குளுக்கோசுதான் நமது உடலில் உள்ள மிக நுண்ணிய மயிர்த்துளைக் குழாய்களை எல்லாம் அழித்து சிறுநீரகம் செயல் இழந்து போகவும், கண் பார்வை அற்றுப்போகவும் காரணமாக இருப்பதோடு மரணத்திற்கும் காரணமாக இருக்கின்றது.

இப்போ சொல்லுங்கள், இவ்வாறு குருதியில் அளவுக்கு அதிகமாகக் குளுக்கோஸ் இருந்து விட்டுப் போகட்டுமே என்று விட்டுவிட முடியுமா?

இந்த நோய் என்னையும் தாக்கிவிடுமோ என்று பலர் பதைபதைப்பதை பார்த்திருப்பீர்கள். 'சீனி போடாமல் கோப்பி போடுங்கள்' என்று ஒருவர் சொல்ல ஆரம்பித்துவிட்டார் என்றால் இந்த நோயைப்பற்றிய எச்சரிக்கை ஒருவருக்கு வந்து விட்டது என்று சொல்லிவிடலாம்.

யார் யாரை எல்லாம் இந்நோய் தாக்கக் கூடும் என்பதைப் பார்த்தால் உங்களுக்கு பயம் இன்னமும் அதிகரிக்கத்தான் செய்யும்.

ஒருவருக்கு நாற்பது வயதுக்கு மேலாகி விட்டது என்றால் அவரை இந்த நீரழிவு நோய் நோட்டம் விடுகின்றது என்பதே அர்த்தம். காரணம் வயது போகப் போக இன்சுலின் சுரக்கின்ற அளவு குறைகின்றது. பரம்பரை அலகுகள் மூலம் இந்நோய் கடத்தப்படுகின்றது. எனவே உங்கள் பெற்றோர்களில் ஒருவருக்காவது இந்நோய் இருந்திருந்தால் அல்லது உங்கள் சகோதரர்கள் எவருக்காவது இருந்தால் உங்களையும் இந்நோய் தாக்கலாம் என்று நம்புவதற்கு இடம் இருக்கின்றது.

**ஒருவருக்கு நாற்பது வயதுக்கு மேலாகி விட்டது என்றால் அவரை இந்த நீரிழிவு நோய் நோட்டம் விடுகின்றது என்பதே அர்த்தம். காரணம் வயது போகப் போக இன்சுகின் சுரக்கின்ற அளவு குறைகின்றது.**

அத்தோடு அளவுக்கு அதிகமான உடல் நிறை உள்ளவர்களையும், கர்ப்பக் காலத்தில் தாய்க்கு இந் நோயின் பாதிப்பு இருந்தவர்கள், ஏற்கனவே உடலில் கொலஸ்ரோலின் அளவு அல்லது கொழுப்பின் அளவு அதிகமாக இருப்பவர்கள், ஆசியாவைச் சேர்ந்தவர் அல்லது ஆபிரிக்க பரம்பரையைச் சேர்ந்தவர், இலத்தீன் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்தவராக இருத்தல், குருதியில் உள்ள குளுக்கோசின் அளவு சாதாரணமாக இருக்க வேண்டியதைவிட அதிகமாக இருப்பவர்கள், அதிக இரத்த அழுத்தம், இதயநோய்கள் உள்ளவர்களை எல்லாம் இந்நோய் தேடி அலைகின்றது. சற்று கண்ணயர்ந்து போனார்கள் என்றால் எதிர்பாராத நேரத்தில் இவர்களை இந்நோய் தாக்கிவிடும்.



இந்நோய் தாக்கி விட்டது என்றால் சில அறிகுறிகள் தென்படும். அடிக்கடி சிறுநீர் கழித்தல், வழமைக்கு மாறான கடும் தாகம், திடீரென நிறை குறைதல், களைப்பு, மங்கலான பார்வை, பாதங்களிலும் கைகளிலும் விறைப்பு ஏற்படுதல் போன்றவை இந்நோயின் அறிகுறிகளாகும். ஆனால் துரதிஸ்டவசமாக பல சமயங்களில் இந்நோய் வந்த பின்னரும் இவ்விதமான எந்தவித அறிகுறிகளும் பலருக்குத் தெரிவதில்லை.

நீரிழிவு நோய் வந்துவிட்டது என்று எவ்வளவுக்கு எவ்வளவு முன்கூட்டியே அறிந்து கொள்கின்றோமோ அவ்வளவுக்கு அவ்வளவு நாம் இதன் கொடிய பாதிப்புகளில் இருந்து நம்மை தற்பாதுகாத்துக் கொள்ள பெரு வாய்ப்புள்ளது என்பதை எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இதனால் வருடா வருடம் நீங்கள் உங்கள் குடும்பவைத்தியரிடம் சென்று இரத்தப் பரிசோதனை செய்து கொள்வது மிக மிக அவசியமான காரியமாகும்.

நீரிழிவு நோயால் கடுமையாகப் பாதிக்கப் பட்டவர்களில் அனேகம் பேர்களின் கால்கள் முழங்கால் மூட்டுக்குக் கீழே துண்டிக்கப் பட்டுள்ளது. இதற்கான காரணம் தான் என்ன?

நோய் கட்டுப்பாட்டை மீறிப் போய்விட்டவர்களுக்கு காயங்கள், புண்கள் உடலில் வந்தால் உடனே மாறாது. அவை மாற வாரக் கணக்காகவும், மாதக் கணக்காகவும் காலங்கள் எடுக்கலாம். குருதியில் உள்ள மிதமிஞ்சிய குளுக்கோசினால் குருதிக் குழாய்கள் சிதைவடைவதாலும், குழாய்களில் அடைப்புகள் ஏற்படுவதாலும் குருதி உடலின் பாகங்களுக்குச் செல்லும் வேகம் மெல்ல மெல்லமாகக் குறைந்து போகின்றது. புண்கள், காயங்கள் ஏற்படும் இடங்களுக்கு குருதி தேவையான அளவிலும், சீராகவும் சென்றாலே அவை குணமடையும். இதே நேரம் குருதியில் குளுக்கோசின் அளவு அதிகமாக இருப்பதால் காயங்களிலும், புண்களிலும் குடி கொண்டுள்ள உள்ள கிருமிகள், வெகு குசியாக அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டு கும்மாளம் போட்டுக் கொண்டிருக்கும். இவை காரணமாக புண்களும், காயங்களும் இலேசில் மாறாது. இப் புண்கள் பெரும் வேதனையைத் தந்து கொண்டிருக்கும்.

**நீரிழிவு நோயாளிகளின் பாதங்களுக்கும் சீராக குருதி செல்கின்றது தடைப்படுகின்றது. காலக்கிரமத்தில் நரம்புகளும் பாதிக்கப்பட்டு பாதங்களின் உணர்வு திறனும் குறைந்து போகின்றது. இந்நிலையில் காயங்கள், புண்கள் வந்துவிட்டால் இலேசில் மாறமாட்டாது. புண்கள் பெருத்துக்கொண்டே போகும். பாதத்தில் பெரும் ஓட்டைகள் ஏற்பட்டு பார்ப்பதற்கு மிகப் பயங்கரமாக இருக்கின்ற நிலைமையும் ஏற்படலாம்.**

நீரழிவு நோயாளிகளின் பாதங்களுக்கும் சீராக குருதி செல்கின்றது தடைப்படுகின்றது. காலக்கிரமத்தில் நரம்புகளும் பாதிக்கப்பட்டு பாதங்களின் உணர்வு திறனும் குறைந்து போகின்றது. இன்நிலையில் காயங்கள், புண்கள் வந்துவிட்டால் இலேசில் மாறமாட்டாது. புண்கள் பெருத்துக் கொண்டே போகும். பாதத்தில் பெரும் ஓட்டைகள் ஏற்பட்டு பார்ப்பதற்கு மிகப் பயங்கரமாக இருக்கின்ற நிலைமையும் ஏற்படலாம். இந்நிலைமையின் அடுத்த கட்டமாகவே இந்த காலை முழங்காலுக்கு கீழே துண்டிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை மருத்துவர்களுக்கு ஏற்படுகின்றது.

இந்நிலைமை ஏற்படாமல் இருக்க வேண்டும் என்றால் பாதங்களை பாதுகாப்பாக பேணிக் காக்கவேண்டியது இந்நோயால் பாதிக்கப் பட்டவர்களின் பிரதானமான ஒரு கடமையாகும். பாதங்ளைப் பாதுகாப்பது எப்படி?

- இதை அடுத்த இதழில் பார்ப்போம்.




# Niru BRAND®

## 'நிரு' தயாரிப்புக்கள்'

கனடிய சுகாதார விதிகளுக்கமைய
கனடாவில் தயாரிக்கப்படுகின்றன

## No.1

முதல் தரமான
மிளகாய், மல்லி
ஏனைய
சரக்கு வகைகள்
கொண்டு
தயாரிக்கப்படுவதனால்

## தரம்

## No. 1

**Manufacturers & Distributors of**

*Niru Brand*® Products

NIRU ENTERPRISES INC.
76 Howden Road, Scarborough, Ont. M1R 3E4 Canada
Tel: 416-750-1976 Fax: 416-750-8779
E-mail: niru@total.net Web: www.niru.com

Distributors in Europe

UK. Marketing Office: NIRU ( Europe) LTD.

Unit 11, Mitcham Industrial Estate, 85, Streatham Road,
Mitcham, Surrey, CR4 2AP,
U.K. Tel.: 44 + 208 640 8228
Fax: 44 + 208 640 8312

# தமிழா நீ பேசுவது தமிழா?




தொண்டமனாறு செல்வச்சந்நிதி தேர், தீர்த்தத்தின் போது நாலா பக்கமும் காவடிகள் வந்துகொண்டிருக்கும். காவடி, மேளம் தாளம், பஜனைகளைச் சத்தம் சூழ உள்ள கடல் அலைகளே பயப்படும் வகையிலிருக்கும். அதைவிட மோசமாக இருந்தது உலகரின் வீடு.





பாடசாலைகள் தொடங்க இன்னும் ஒருவாரம் தான் இருக்கிறது. ரூபன், ரூபி, பிறிம்லி மீனாவின் மகன் கொண்டு வந்த பாடல்களை DVDயில் போட்டு ரசித்துக் கொண்டிருந்தனர். ஆட்டிலறி அன்னம்மா செக்கண்புளோர் செல்லம்மா புதியபாடல்களை ரசித்தாலும் ரசிக்காத மாதிரி முகத்தை வைத்துக்கொண்டிருந்தனர்.






அப்படி போடு போடு போடு, சின்னவீடா வரட்டுமா, பெரியவீடா வரட்டுமா, சக்கரை சக்கரை சக்கரை இதில் எறும்புக்கு என்ன அக்கறை என்ற பாடல் பிறிம்லிமீனாவின் மகனும் அவரோடு சரக்கு ரயில் வண்டியில் இணைந்த புதிய பெட்டிகள் போல வேறு இரு சினேதர்களும் தில்லான மோகனாம்பாள் நாட்டிய பேரொளி பத்மினி ஆடியதை விட மிகவேகமாக உடம்பை வளைத்து ஆடிக்கொண்டிருந்தனர். உலகரின் நெஞ்சினில் முட்டும் ஆத்திரமும் பெருமூச்சாக வெளிவந்தது. ஆடிய ஆட்ட மென்ன நினைத்துப் பார்க்கமுடியுமா?

இன்றுள்ள இளைஞர்கள், மாணவர்கள், ஏன் பெரியவர்களுக்குக் கூட பாடல்களின் அர்த்தங்கள் புரிவதில்லை. Sinna veeda varadduma periya Vdde Varadduma, சின்னவீடா வரட்டுமா பெரியவீடாவரட்டுமா Kaddi Piddy Kady Piddyda கட்டிப்பிடி, கட்டிப்பிடிடா என ஆங்கிலத்தில் எழுதி இசைச்சுவையோடு ஆடுகிறார்கள்.

அர்த்தம் புரியும் இயல் இசை நாடகம் முத்ததமிழ் விழாக்கள் மூலம் கிராமங்கள் தோறும் தமிழ் பரப்பவும் தமிழ் வளர்க்கவும் மக்கள் எத்தனை பாடுபட்டனர். இன்று கனடாவில் CTBC, CTR, கீதவாணி, தமிழோசை, TVI, ATN வீடியோ மாருதி, சிறுவர் நிகழ்ச்சிகள், மாணவர் நிகழ்ச்சிகள் என எத்தனை மணிநேரம் செலவிட்டு சிறுவர்கள், மாணவர்களுக்கு பல்சுவை நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். அதுதவிர பாடல்கள், நாடகங்கள், சினிமா மூலம் வரும் அப்படி இப்படி வார்த்தைகள் சிறுவர் மனதில் கூடுதலாக பதிகிறது.

ஒருவர் திருமண வீட்டில் 8 வயது சிறுவனிடம் கேட்டார் தமிழ் தெரியுமா என்று சிறுவன் ஓம் என்று விட்டு கலியாணம் தான் கட்டிக்கிட்டு ஓடிக்கலாமா, ஓடிபோயி கல்யாணம்தான் கட்டிக்கலாமா? என மகிழ்ச்சியுடன் பாடியது. பெற்றோர்கு முகத்தில் ஈயாடவில்லை.

அந்தச் சந்தர்ப்பத்தில் பெற்றோரில் எந்தப் பிழையுமில்லை. அன்றாட வாழ்வில் நாம் எதனைக் கேட்கிறோம், எதனைச் சொல்கிறோம்.

"சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்"

இன்று சுற்றிவர பேசப்படும் தமிழ் மனப்புழுக்கத்தை உண்டு பண்ணுகிறது. தமிழில், சமயத்தில் இலக்கியத்தில் யேசுபிரான், தசரதச் சக்கரவர்த்தி, இராமபிரான், சீதாப்பிராட்டி, முருகப்பெருமான்





மதிப்பிற்குரிய பெருமதிப்பிற்குரிய அன்றுள்ள மேடைகளில் எழுத்துருவில் எத்தனை இனிய தமிழைக் கண்டவர்களுக்கு

யோ மச்சான், ஹலோ அன்ரி, ஹலோ அங்கிள்... காணபவரெல்லாம் அன்ரியும் அங்கிளும் ஆகிவிட்டனர். அண்ணன், தம்பி, மாமன், மச்சான், சித்தி, சித்தப்பா, பெரியம்மா, பெரியப்பா எல்லாம் மூட்டை கட்டியாகிவிட்டது.



வயலுக்கு வந்தாயா ஏற்றம் இறைத்தாயா

கொஞ்சிவிளையாடும் என்குலப் பெண்களுக்கு மஞ்சள் அரைத்து பணிபுரிந்தாயா? மாமனா, மச்சானா என வீரபாண்டிய கட்டபொம்மன் படத்தில் நடிகர் திலகம் சிவாஜி பேசிய வசனங்கள் வானிலிருந்து காதில் நுளைந்தது போலிருக்கிறது. சிரிக்கவேணும் என்பதற்காக தமிழை கேவலமாக பேசினால் அர்த்தமில்லாமல் போய்விடும்.



உலகர் ரிவியில் கண்களைச் செலுத்தி ஆடல் பாடல் ரசிப்பாக இருந்தாலும் "சொல்லு தலைவா இந்தப்படை வெல்லும் என்று சொல்லு தலைவா" என்ற புதியபாடல் ஓடிக்கொண்டிருந்தது. தமிழை வளர்ப்பதிலும் வளைப்பதிலும் நல்லதும் கெட்டதும் நடக்கத்தான் செய்கிறது.

இலங்கையில் இருந்து உலகெல்லாம் சுற்றிவரும் அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீட் அவர்கள் ஒரு பேட்டியில் குறிப்பிட்டது போல அறிவிப்பாளர்கள் கடமை மிகப்பெரியது. தமிழை தமிழாகப் பேசவேண்டும் எனக்குறிப்பிட்டது மனதில் நிற்கிறது. உலகண்ணை நீங்கள் பொங்குதமிழ் நிகழ்ச்சிக்கு வேட்டியோ காற்சட்டையோ என்று அன்னம்மாக்கா கேட்டா. தனக்குள் சிரித்தபடி ராசம்மாக்கா உள்ளே சென்றா.

### பார்த்தேன் ரசித்தேன் பக்கத்தில் இருந்தேன்



வெளிநாட்டலிருந்து கனடா வந்தவரிடம் ஒருவர்

கனடாவில் என்ன பார்த்தீர்கள் - சிஎன் ரவர், ஸ்கைடோம், நையகரா நீர்வீழ்ச்சி, கோயில்கள் தேவாலயங்கள், வானொலி நிலையங்கள்.



கனடாவில் இருப்பவரிடம் வெளிநாட்டிலிருந்து வந்தவர் - நீங்கள் என்ன பார்த்தீங்கள்

கனடாவில் இருப்பவர் - மெட்டி ஒலி, அண்ணாமலை, கோபுரம்

மற்றவர் - ????

- கலகலப்பு தீசன்

## 114 நகைச்சுவைத் தொடர் ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்


## கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

- வீடு வாங்க விற்க மற்றும் இலவச ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள
- முதல் முறையாக வீடு வாங்குபவர்களிற்கான சலுகைகளை அறிய
- குறைந்த வட்டி வீதத்தில் Mortgage செய்து கொள்ள

அழையுங்கள் நந்தா




COLDWELL BANKER
Coldwell Banker Coburn Realty

**Nantha Aiyadurai**, B.Eng.
Sales Rep.
Office : 613.823.7555
Cell : 613.866.9931
Toll Free : 1 800 472.6512

## MORTGAGES



*Five Years closing mortgage rates (அடமானம்) 4.9% on $100,000.00 per month installment comes out $550.00. For different time period closing rates are given below*



*LOW - LOW RATES AVAILABLE. TO GET BEST RATE IN TOWN PL. CALL: ANIL JOSHI*

For more information call:
Anil Joshi at
416.888.1072



# அப்டாக் கலைப்பயிலகம்
# APTAC Arts Academy

- Unit 1, 5637 Finch Ave. E. ( Finch & Tapscott )
- 5 Douglas Haig Dr. (Mccowan & Elson)
- 10 Sunny Glenway (Donmills & Eglinton)

ஆகிய இடங்களில் அனுபவமும் தகுதியும் வாய்ந்த
ஆசிரியர்களின் இசை, நடன வகுப்புக்கள்

- **பரதநாட்டியம்** - திருமதி ரேணுகா விக்னேஸ்வரன்
- **வாய்ப்பாட்டு** - சங்கீத பூசணம் திருமதி நளினி குகசீலன்
- **வயலின்** - திருமதி அருந்தா ஜெயநாதன்
- **மிருதங்கம்/தபேலா** - திரு. தி. ஜெயச்சந்திரன்
- **வீணை** - திருமதி ஜனனி தணிகாசலம்

மேலதிக தொடர்புகளுக்கு:

**மாசிலாமணி நல்லரட்ணம்**
**- 416.268.8561**
**- 647.439.3175**

# SAFETY TRUCKS
## Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




In Classes
- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Cours

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படு
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம் (10 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

17 Years Canadian
Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

**YOGAN SOCKALINGAM**

Truck Driving போதனாசிரியர்

**905-793-9546 / 416-616-5979**

250 Summerlea Road, Brampton, ON

# SRI PARADISE Catering & Take -ou

## 416.269.4509 / 416.509.2454

292 Markham Road, Scarborough, ON

| திங்கள் - செவ்வாய் கொத்துரொட்டி ஆடு or மாடு or கோழி | புதன் - வியாழன் புட்டு Combo- குழல் பிட்டு, மாசிச்சம்பல், நெத்தலி, உருளைக்கிழங்கு குழம்பு | வெள்ளி ரக்கறிச்சாப்பாடு 5 மரக்கறி, சலாட், பப்படம், ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு, பாயாசம், வடை | வெள்ளி inner Special மசாலா தோசை, சாம்பாறு, சம்பல் | Dinner Special சிங்கப்பூர் நூடில்ஸ், தண்டூரி சிக்கன் |
|---|---|---|---|---|
| $2.99 | $2.99 | $4.50 | $2.99 | $3.99 |



| பரடைசின் Special புரியாணி, தண்டூரி சிக்கன், இஞ்சிச் சம்பல், salad | Daily speciall மரக்கறிச்சாப்பாடு 3 மரக்கறி சலாட், பப்படம் ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு |
|---|---|
| $2.99 | $2.99 |

சனி - ஞாயிறு Lunch Special வாழையிலைச் சாப்பாடு
கோழி, ஆடு, மாடு, இறால், நண்டு or மீன், முட்டை, கருவாடு, அச்சாறு, மீன் பொரியல், கட்டைச்சம்பல், கட்லட், உருளைக்கிழங்கு, நெத்தலி பிரட்டல், கத்தரிக்காய் பிரட்டல்

**$5.99**

சமையலில் அனுபவம் உள்ளவர்கள் வேலைக்குத் தேவை. தொடர்பு கொள்ளவும்

# 3 ஆவது சர்வதேச தமிழ் குறுந்திரைப்படவிழா

## வழங்கப்பட்ட விருதுகள்

| Movies | Director | Duration | Country |
|---|---|---|---|
| 1. [illegible] (Travel) | Stephan | 15 | Norway |
| 2. [illegible] | S.Senthilnathan | 15 | Canada |
| 3. [illegible] | S.Subeshi Mahalingam | 10 | Canada |
| 4. [illegible] | K.S.Balachandran | 20 | Canada |
| 5. [illegible] | Velutas | 12 | India |
| 6. My life | V.S.Srirangan | 20 | India |
| 7. [illegible] | Arasa Kumar | 30 | India |
| 8. [illegible] | K.B.Baleth | 20 | Canada |
| 9. [illegible] | Rubran | 10 | Canada |
| 10. Abuse | M.Baskar | 10 | Canada |
| 11. It's all about | Ranjith Joseph | 4 | Canada |
| 12. [illegible] | Ranjith Joseph | 15 | Canada |
| 13. [illegible] | S.Sumathy Rupan | 20 | Canada |
| 14. [illegible] | S.Sumathy Rupan | 10 | Canada |
| 15. Winning Star | Jatana | 25 | India |
| 16. Untitled | S.Sridharan | 10 | Canada |
| 17. [illegible] | Rupesh | 45 | Sri Lanka |
| 18. [illegible] | Rupesh | 45 | Sri Lanka |
| 19. [illegible] | S.Saharan | 10 | India |
| 20. Dam Inside | Jason | 10 | Canada |
| 21. [illegible] | Ranjith Joseph | 25 | Canada |
| 22. [illegible] | Varan | 10 | Canada |
| 23. In the land of Non Violent | Rene Chandran A. Peries | 12 | Canada |

தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து படங்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. சிறந்த படம் 'கனவு' -இந்தியா. சிறந்த இந்தியன் ஓசன் அவார்ட் (Indian Ocean Award) இந்திய ரூபா 10,000/=, 'ஈசல்' - இந்தியா, Exile Award 'காசு மரம்' - கனடா, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட படம்

### வானரன்

'கோப்பை' - கனடா, சிறந்த இயக்குனர் ரஞ்சித் ஜோசப், 'It's all about' - கனடா, கமரா ரூபன் இளையதம்பி 'உஷ்'- கனடா, திரைக்கதை வசனம் கே. எஸ். பாலச்சந்திரன் 'வாழ்வு எனும் வட்டம்' - கனடா, Editing - Jason 'துரோகம்' - கனடா.

குறிப்பு: கடந்த இரண்டு திரைப்பட விழாவிலும் கனடாவில் இருந்து 2 படங்கள் தெரிவுசெய்யப்பட்டன. இம் முறை 15 படங்கள் தெரிவு செய்யப்பட்டது.






## 2003 இன் அகில இந்தியாவின் தேசிய விருது

**அகில இந்தியாவின் சினிமாப் படங்களின் 51ஆவது தேசிய விருது வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட விருதுகளிலிருந்து சில முக்கிய தகவல்கள்.**

சிறந்த நடிகர் - விக்ரம் - படம் பிதாமகன்
சிறந்த நடிகை - மீரா ஜாஸ்மின் படம் - ஒன்னு ஒரு வில்லபம் (மலையாளம்)
சிறந்த படம் - ஷ்வாஸ் (மராட்டி)
சிறந்த தமிழ்ப் படம் - இயற்கை
சிறந்த இயக்குனர் - கௌதம் கோஷ் படம் அபர் ஆரண்யா (வங்காளி)
சிறந்த ஜனரஞ்சகப்படம் - முன்னாபாய் எம்பிபிஎஸ் (Hindi) (தமிழில் வசூல் ராஜா MBBS)
சிறந்த Jury Award - மனோஜ் பாஜ்பாய் படம் பின்ஜார் (ஹிந்தி)

- நடிகர் திலகம் சிவாஜி கனேசன் ஒரேயொரு தடவை சிறந்த Jury Award ஐ பெற்றுள்ளார்.

சிறந்த குழந்தை நட்சத்திர விருது - அருண் சித்தாலே - ஷ்வாஸ் (மராத்தி), நடிகர் ஜெயராமின் மகன் காளிதாசன் - என்ர் வீடு அப்பூந்தம் (மலையாளம்) ஆகிய இருவருக்கும் வழங்கப்பட்டது.
சிறந்த பாடகர் - சோனு நிகம் - கல் கோ நகோ (ஹிந்தி)
சிறந்த பாடகி - தரளி சர்மா (அசாம்)
சிறந்த இசையமைப்பாளர் - சங்கர் மகாதேவன், எசான் லோய் படம் கல் கோ நகோ (ஹிந்தி)

- தமிழுக்கு இம்முறை ஒரேயொரு விருது சிறந்த நடிகர் விருது கிடைத்துள்ளது.

## காலத்தால் வென்ற பாடகி ஜிக்கியை காலன் அழைத்துக் கொண்டான்



பலமொழிகளில் பாடி பலஆயிரம் மக்களை மகிழ்வித்த ஜிக்கி, தனது 70 ஆவது வயதில் காலமாகினார். இவர், பாடகரும், இசை அமைப்பாளருமான ஏ. எம் ராஜாவின் துணைவியாவார். ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த இவர் 13ஆவது வயதில் பாட ஆரம்பித்து தனது அந்திக்காலம் வரை பாடியே வந்துள்ளார். இவரது முதல் பாடல் ஞானசவுந்தரி படத்தில் 'அருள் தாரும் தேவமாதா' என் பாடலுடன் இசைப் பயணம் ஆரம்பித்தது. இவரது 'துள்ளாத மனமும் துள்ளும்', 'மயக்கும் மாலைப் பொழுதே நீ போ போ', 'கண்ணில் வந்த மின்னல் போல' போன்ற பாடல்கள் நெஞ்சைவிட்டகலாத பாடல்களாகும்.

பிரபு நடித்த செந்தமிழ் பாட்டு படத்தில் 'வண்ண வண்ண சொல்லெலடுத்து' என்ற பாடல், தேவை இசையில் 'நினைத்தது யாரோ' என்ற புதிய பாடலையும் பாடியது குறிப்பிடத்தக்கது.


MapleLodge FARMS
Bringing new ideas to the table.
FACTORY OUTLET
"The One Stop Poultry Shop"
Buy Bulk & Save $$
• Farm Fresh Chicken Daily
• Canada Grade "A" • Federally Inspected
Zabiha Halal Products Available www.zabihahalal.com
Volume Discounts for Wholesalers!
Smaller Quantities available at our Greenhouse Country Market
Just 1/2 km south of the Factory Outlet!
www.maplelodgefarms.com
Factory Outlet Hours:
Mon to Thurs ........ 9:00 a.m. - 8:00 p.m.
Fri ........ 9:00 a.m. - 9:00 p.m.
Sat ........ 8:00 a.m. - 6:00 p.m.
Sun ........ 9:00 a.m. - 5:00 p.m.
Holidays ........ 10:00 a.m - 5:00 p.m.
905-455-8340 8301 Winston Churchill Blvd.
open 7 days a week
Embleton Rd. / Winston Churchill Blvd. / Mississauga Rd. / Factory Outlet / Country Market / Steeles Ave. / Hwy 401





# தகாத செயலைத் தடுப்பதே உண்மை நட்பு

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

தங்களுக்குப் பாதகமும் அபாயமும் தரக்கூடிய ஏதாவதொன்றில் ஒருவர் ஈடுபடும்போது, அதைத் தடுத்து நிறுத்தாது, ஒன்றுமே சொல்லாமல் சும்மா இருப்பது, அவர்களை நீ நேசிப்பதன் அடையாளமாகாது. இப்படித் தகாத முறையில் இவர் செயல்படுகின்றாரே, நான் இதை நிறுத்த எதைச் சொல்ல, எதைச் செய்ய என்று தெரியவில்லையே என்று அங்கலாய்த்தாலும், ஒருவரை உண்மையாக நேசித்தால் அவரை நிறுத்த ஏதாவது செய்து நீ அவரை நிறுத்துவாய். நீ அவரை மரியாதையுடன் மதிக்கின்றாய், ஆனால் அவரின் தகாத நடத்தையை ஆதரிக்காதிருப்பது பிழையில்லை. ஆதலால் இது அவருக்கு விளங்கினாலும் பரவாயில்லை. ஒருவரை உண்மையாக நேசிக்கும்போது அவரது தகாத நடத்தையைப் பற்றி அவருக்கு உணர்த்துவது உண்மையில் நீ அவரை எவ்வளவு நேசிக்கின்றாய் என்பதை அவருக்கு எடுத்துக்காட்டும். உனது அன்பின் பெறுமதியை அவருக்கு உணர வைக்கும்.

உனது அன்புக்குரியவர் பிரச்சினையைச் சமாளிக்க முடியாது திண்டாடுவாரே என்பதற்காக அவரிடமிருந்து உண்மைகளை மறைத்து பாதிக்கதையைக் கத்தரித்து என்னென்னவோ எல்லாமோ செய்து பூசி மெழுக இன்றுவரை நீ முயற்சி செய்திருக்கலாம். உனக்கு அவர்களைப் பற்றித் தெரிந்த சகல உண்மைகளையும், அன்பான வழிகளில் தெரிந்த அவருக்குத் தெரியப்படுத்துவேன் என்று இன்று உறுதிகொள். 'உன்னை நான் எவ்வளவு நேசிக்கின்றேன் தெரியுமா' என்ற ஆரம்பத்துடன், நீ சொல்ல வேண்டிய கசப்பானவற்றை எல்லாம் அவருக்குச் சொல். அன்பின் அடையாளமாகிய சத்தியத்துடன் எனது பேச்சு, செயல் அனைத்தையும் இனி இணைத்துக்கொள்ள இன்று ஆரம்பிக்கின்றேன்.

இப்போ, இங்கே என் சூழலில் உள்ளவர்கள் என்மேல் வைத்துள்ள அன்பை நான் புரிந்து உணர்ந்து கொள்கின்றேனா? அன்பு வாசகரே! மேற்கண்ட கேள்விக்கு உமது பதில் என்ன? அன்பை வெளிப்படையாகக் காட்டாத எமது கலா-சாராச் சூழ்நிலையில் கணவன், மனைவி, பெற்றோர், பிள்ளை போன்ற குடும்பத்து உறவுகளே தம்மைக் நேசிக்கின்றாரா இல்லையா எனத் தடுமாறும் நிலை சிலவேளைகளில் எவருக்கும் ஏற்படலாம். ஆனால் உறவுகள், வெளிப்படுத்தாது தம்முள் மறைத்து வைத்திருக்கும் என் மீதுள்ள அன்பினை நான் அடையாளங் கண்டுகொண்டவுடன், அன்பைப் பரிபூரணமாக நான் உணர்ந்து கொள்வேன்.

ஒருவரை நேசிப்பது வேறு, ஒருவருடன் அன்பான உறவை ஏற்படுத்திக் கொள்வது வேறு. ஆனால் இவ்விரண்டின் வித்தியாசங்களைப் புரிந்து கொள்ளாமல், எப்போதாவது குழம்பியிருக்கின்றீரா? ஒருவரின் நலனைப் பற்றிக் கவனித்துக் கவலைப்படுவது டன், ஒருவரைச் சுற்றியே எப்போதும் இருக்க விரும்புவதை ஒப்பிட்டு விசாரப் பட்டிருக்கின்றீரா? உங்களுக்கு உண்டாகும் ஆசாபாசங்கள் தேவைகள் போன்றவற்றையும், அவற்றை எப்படி எப்படி நிறைவேற்றிக் கொள்ளலாம் என்னும் இரண்டாவதையும் எப்போதாவது ஒன்றாக நினைத்துக் குழம்பியிருக்கின்றாயா? இவ்வாறு இரண்டும் ஒன்றே ஒன்று தான் என்பதைப் புரிந்து கொள்ளாமல் தான் நீ முழுவதையும் விளங்காமல் குழப்பமடைந்திருக்கலாம்.

இன்னொருவருடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள விரும்புவது இயற்கையான அடிப்படை மானிட இயல்பு. யாராவது என்னை மதித்து, மரியாதை செய்து அரவணைத்து என் சொற்படி நடந்து நிபந்தனையில்லாது என்னை நேசிக்கமாட்டாரா என்பது தான் எம் ஒவ்வொருவரின் ஏக்கம். வாழ்வில் இவையெல்லாம் கிடைத்தும், அவை ஒரு அந்தரங்க உறவுடன் பின்னிப் பிணைந்தில்லாவிட்டால், ஏன் எனக்கு மட்டும் ஒரு நல்ல மனைவி, நல்ல கணவன் வாய்க்கவில்லை என நீ யோசிக்கலாம்.

ஓர் உறவு என்றால் என்ன என்பதையும் அந்த உறவு எம்மைப்பற்றி எதை வெளிப்படுத்துகின்றது என்பதையும் சரிவரப் புரிந்து கொள்ளாமல் நாம் குழம்புவது சர்வ சகஜம். எமக்குத் தேவைப்படும் அன்பையும் அரவணைப்பையும், நாம் விரும்பும் அந்தரங்க உறவு எமக்குத் தர வேண்டும் என்ற எமது தேவையுடன் ஒப்பிட்டுச் சிலவேளை குழம்புவோம். உடல்சாராது இரு மனம் மட்டும் ஒன்றையொன்று விரும்புவதையும் நாம் சிலவேளை ஒரு பகிஷ்கரிப்பு, ஒரு மறுப்பாகப் புரிந்து கொள்ளலாம், எமக்கு விருப்பமானவர்களைத் தேர்ந்தெடுத்துத் தான், பெரும்பாலும் நாம் உறவுகளை உருவாக்குகின்றோம். எந்த உறவை வளர்ப்பது, எந்த உறவை முறிப்பது என்பதைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் எமது ஒவ்வொருவரின் அடிப்படை உரிமை. ஆகவே சில வேளைகளில் மற்றவர்களின் தேர்வு உன்னுடன் ஒரு சம்பந்தமுமற்றதாக அமையலாம்.



அன்பான அந்தரங்க உறவில்லாமலே மற்றவர்கள் உன்னை விரும்பி நேசிக்கலாம் என்பதை மறந்துவிடாதே. இந்த உண்மையை ஜீரணிப்பது உனக்கு கஷ்டமாயிருக்கும் என்பது எனக்குத் தெரியும். இது உன்னை நிச்சயம் குழப்பும். ஆனால் நான் உனக்குச் சொல்லப் போவதைச் செய்ய உனக்குக் காதல் அல்லது அந்தரங்க உறவுதான் வேண்டும் என்று அடம்பிடிக்காதே. தற்போது உன்னைச் சூழ்ந்துள்ள உறவுகளின் அன்பைப் புரிந்து கொள்ள கண்களை உடனடியாக அகலத் திறந்து பார்.


இதுவரை நான் விரும்பியவர் என்னுடன் அந்தரங்க உறவை ஏற்படுத்தி என்னை நேசிக்க விரும்பவில்லையே என்ற உனது ஆதங்கக் குழப்பத்தை மூட்டை கட்டி வை. தற்போது உனது குடும்பம், நண்பர், வேலைச் சகபாடிகள், அயலவர் போன்ற சகல உறவுகளும் உனக்களிக்கும் அன்பையும் அரவணைப்பையும் மரியாதையையும் அடையாளங்கண்டு ஏற்று மகிழ்வதில் கவனம் செலுத்து. கிளையில் இருக்கும் இரு குருவிகளைவிட கையில் இருக்கும் ஒரு குருவி மேலானதல்லவா.

மேலதிக தகவல்களிற்கு
அழையுங்கள் 905-624-9617



லலிதா புரூடி

**DEBT & MORTGAGE SOLUTIONS !!**



- கடன் தொல்லையா?
- கடன்காரர்களின் தொந்தரவா?
- Credit பிரச்சனையால் Mortgage கிடைக்கவில்லையா?

**கவலைப்படாதீர்கள்!**

அனைத்து வித பொருளாதார பிரச்சனைகளுக்கும் தீர்வு காண

முதல், இரண்டாவது, மூன்றாவது Mortgage பெற அழையுங்கள்

**ராஜ்**

**416-835-6695**

**Call : 'RAJ'**

for all kinds of Debt & Mortgage Solution

Lendingtree.ca



**MANIKKANDAN**

Take Out & Catering

தமிழ் தாய் நினைவைக் கொண்டுவரும் தராதரமிக்க, கனடிய கோட்பாடுகளுக்கு அமைய எமது தயாரிப்புகளான சோறு, மரக்கறி, இறைச்சிக்கறி, கடலுணவு, கொத்துரொட்டி வகைகள், ரொட்டி, இடியப்பம், புட்டு, இட்டலி, தோசை, மசாலா தோசை, வடை, Rolls, Cutlets, Patties போன்ற பலவகை உணவுவகைகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள் **மணிகண்டன்**.

**புதிய கிளை**

1585 Ellesmere Rd.
(Progress Park Plaza)
**416.438.2225**



Wedding or any Occasions
Special Deals Available

- சுவை நிறைந்த பல்வேறு வகையான INDIAN SWEETS
- வீட்டில் தயாரிக்கப்பட்ட மாங்காய், தேசிக்காய் அச்சாறு



**இடியப்ப மெஷின் விற்பனைக்கு உண்டு.**

இல்லங்களில் நிகழும் பலவிதமான வைபவங்களுக்கும் தேவையான உணவுகளை ருசித்து மகிழ்ந்திட அழையுங்கள் மணிகண்டன்.

Call: **Siva: 416-283-1260**

790 Military Trail , Unit 1A, Scarborough ON M1E 4P7



உண்மை
உணர்வு
உரிமை
உறுதி
பொங்கு தமிழ்
ரொறன்ரோ
Queens Park
செப்ரெம்பர்
25
416.335.0622
அம்மன் ஜுவலரி
Rajeev Koneswaran
Sales Representative
நியூ ஸ்பைஸ் லாண்ட்

## சினிமாக் குருவியின் தகவல்கள்



'இயக்குனர் பாலு மகேந்திராவின் உடல் நிலை ஒருவாறு தேறி வருகின்றது' என்றபடி சினிமாக்குருவி மேசையில் வந்து அமர்ந்தது.

'என்ன நடந்தது?' அவருக்கு என்றோம்.
'தெரியாதா? பாலுவுக்கு சென்ற மாதம் மாரடைப்பு ஏற்பட்டு விட்டது. அத்தோடு உடம்பின் ஒரு பக்கமும் சீராக இயங்கவில்லை. பேசவும் முடியாமல் பாலு மகேந்திராவின் நிலைமை கொஞ்சம் ஆபத்தான நிலைமைக்குப் போய்விட்டது. குடும்பத்தினரும், நண்பர்களும் பெரும் கவலையில் ஆழ்ந்து போனார்கள்.'

'இப்போ எப்படி இருக்கின்றார் பாலு?'
'சில நாட்களுக்கு முன்னர் வீடு திரும்பி விட்டார். உடல் நிலைமை கொஞ்சம் கொஞ்சமாக சீராகிக் கொண்டிருக்கின்றது. எல்லாம் மருத்துவர்களின் சாதனை தான்.'

'அப்போ அவருடைய அடுத்த படத்திற்கான வேலைகள் என்ன ஆகுவது?'

'உடல் நிலை தேறியதும் 'அது ஒரு கனாக் காலம்' படப்பிடிப்பு ஆரம்பமாகும் என்று கூறிய சினிமாக் குருவி 'மடமட' வென்று மேசையில் இருந்த தண்ணீரைக் குடித்து முடித்தார்.

'மீண்டும் கோகிலா' என்று கூறி விட்டு எம்மை ஒரு குறும்புப் பார்வை பார்த்தார்.

'ஸ்ரீதேவி- கமல் ஜோடியின் படம் அல்லவா இது'
'மீண்டும் இந்த ஜோடி இணையப் போகின்றது' என்று கண்சிமிட்டினார்.
'உண்மையா?'

'வசூல் ராஜா எம்பிபிஎஸ் பட வெற்றியைத் தொடர்ந்து ராஜ்கமல் இன்டர்நேசனல் சார்பாக அடுத்த படத்தயாரிப்பு வேலைகளில் கமல் வெகு தீவிரமாக இறங்கிவிட்டார். கதை பெயர் எல்லாம் தயார். இதில் ஸ்ரீதேவியை நடிக்க வைக்க ஒரு முயற்சி நடக்கின்றது. அனேகமா திடீரென ஒரு அறிவிப்பு வரலாம்'

'மத்திய அரசே தமிழகத்திற்கு சிறந்த நடிகருக்கான விருது எல்லாம் கொடுத்து கௌரவித்துள்ளது. ஏன் தமிழக அரசின் விருது கள் பல வருடங்களாக வழங்கப்படவில்லை என்று ஏதும் விசாரித் தீரா?' என்று சினிமாக் குருவியின் வாயைக் கிளறினோம்.



'இது பெரி இடத்து விசயம்' புதிர் போட்டார்.

'சினிமாக் குருவிக்கு ஒரு சர்பத் கொண்டு வாங்கப்பா' என்று நாம் குரல் கொடுத்தோம். குளிர்ந்து போன குருவியார் விசயத்தை கக்கினார்.

'சிறந்த படம், நடிகர், நடிகை, இயக்குனர், தொழில் நுட்பக் கலைஞர்கள் உட்பட 22 பேருக்கு வழங்கப்படும் தமிழக அரசின் விருதுகள் பல வருடங்களாக வழங்கப்படவில்லை. இதற்கு அம்மாவின் கோபம் தான் காரணம். விருதுகளை தேர்வு செய்யும் தேர்வுக் கமிட்டி தனது பட்டியலை அரசிடம் ஒப்படைத்து இரண்டு வருடமாகி விட்டதாம். ஊகும், எல்லாம் கிடப்பில் கிடக்கின்றது.'

'அம்மாவுக்கு விருதுகளில் என்ன கோபம்'
'நீர் ஒரு மக்கு பாய்' என்று செல்லமாகத் தலையில் குட்டு வைத்தார் குருவியார்.

'திரைப்படத்துறையினர் ரஜினிக்குப் பின்னா லும், விஜயகாந்துக்குப் பின்னாலும் இருப்பது தான் அம்மாவின் கோபத்துக்கு காரணம்.' என்று கூறியவர் 'சர்' என்று சர்பத்தை உறிஞ்சி விட்டுப் பறந்து விட்டார்.

## கமலுக்கும் டாக்டர் பட்ட

கமல்ஹாசனின் 44 ஆண்டுகள் கலைச்சேவைக்காக சத்தியபாமா நிகர்நிலை பல்கலைக்கழகம் டாக்டர் பட்டத்தை கமலுக்கு வழங்கியுள்ளது. 'டாக்டர்களையே அவமதிக்கின்றார் கமல்' என்று கமலின் கடைசிப் படமான 'வசூல் ராஜா எம்.பி.பி. எஸ்' படத்தின் பெயர் தொடர்பாக தமிழ்நாடு டாக்டர்கள் போர்க்கொடி எழுப்பி நீதிமன்றம்வரை போனதின் பின் இந்த டாக்டர் பட்டம் கமலுக்கு வழங்கப்பட்டுள்ளது ஒரு சுவாரசியமான விடயமே

இதற்கு முன்னர் பல தடவைகள் டாக்டர் பட்டம் வழங்க பல்கலைக்கழகங்கள் முன்வந்த போதும் அதை ஏற்றுக் கொள்ள கமல் மறுத்துவிட்டார். 'அப்போது மறுத்தீர்கள் இப்போது ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று வைரமுத்து அன்புக் கட்டளை இட இந்த பட்டத்தை கமல் ஏற்றுக் கொண்டார்.

இந்த சமயத்தில் கமலின் சில அபிப்பிராயங்களை நமது வாசகர்களுடன் நாம் பகிர்ந்து கொள்கின்றோம். நடிகர்கள் அரசியலுக்கு வருவது பற்றி கமல் கூறுகின்றார்.

'என் சகோதரருடன் பேசும் போது 'ஏன் ஒரு காலத்தில் அரசியலுக்கு வக்கீல்களாக வந்தாங்கள்?' என்று கேட்ட போது
சொன்னார் அதற்கு ஒரு அவசியம் இரு
சட்ட சாசனத்தை திருத்த வேண்டிய தே
இருந்தது. அதனால் அந்த அறிவு உள்ள
வரவேண்டி இருந்தது. அது காலத்தின் தே

இப்போ தேசத்தை ஆள்வது மீடியா. சி
ரிவி, பிரஸ் என்று எல்லா தொ
சாதனங்களும்தான். நடிகர்கர்கள் வெ
கருவிகள் தான். சித்தாந்தங்கள் இல்ல
வெறும் கருவிகள் என்ன செய்யும்? 'மரம் வெ
இல்லாமல் கோடரி என்ன செய்ய முடியும்?

அரசியலுக்கு வருவீர்களா என்று ஒரு
கமலைக் கேட்டபோது கமல் கூறியது. 'அ
லுக்கு கண்டிப்பாக வருவேன். ஆனால்
களை ஏந்தி வரும் சூழ்நிலை இப்போது இல்
துப்பாக்கியுடன் வருவேன்' என்று கூறினார்.

இன்னோர் சந்தர்ப்பத்தில் 'நான் ஒரு பெர
நேசன். எனக்கு எல்லாரையும் பிடிக்
தொப்பியும், குல்லாவும், குடுமியும் நா
அவர்கள் மீது உள்ள எனது நேசத்தை ம
விட முடியாது.' என்று கூறியுள்ளார்.




# NTE AUTO

**New Trade Engineering Inc.**




ஸ்காபரோவில் 13வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair

SIVABALAN

416.750.1573

**என். ரி. இ. ஓட்டோ இங்க்**

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH.


# ACTION HONDA

"WHERE CAR OWNERSHIP IS MADE EASY"



புதிய பழைய HONDA வாகனங்களை
ஈழத்தமிழ் மகன்
**சோதீஸ்**
இடம் பெறும்போது

- சிறந்த சேவை
- Life time Oil change
- மற்றைய எல்லா இடங்களையும் விட கிடைக்காத குறைந்த விலைக்கு உத்தரவாதம்.




**இம்மாத Special**

2.2% Financing

Honda Certified Used Vehicles

**416-704-1179**

அலுவலக நேரம்
Mon., Fri., Sat.: 9:00 am - 6:00 pm
Tues., Wed.: 12 noon - 9:00 pm
4334 Kingston Rd, Scarborough









**Steels/Markham**
Detached 2-Storey
3 Bedrooms
3 Washrooms - Brand New House




**Neilson / Finch**
Detached House
4 Bedrooms,
2 Washrooms - Brand New House




**Young / Finch**
Condo Apartment - Good for investers
close to Subway -

digi Media Creations - 416.467.4952




**Port Union/Kingston**
Detached 2-Storey
3+1 Bedrooms
3 Washrooms

## For Rent
**Neilson/McLevin**
**2 Bedroom condo**

HomeLife
Higher Standards

**HOMELIFE/GTA Realty Inc.**
1711 McCowan Rd., Suite 206, Toronto, ON M1S 3Y3

# சசி செல்வரட்ணம்
Sales Rep.

Direct **416.725.1125**
Office **416.321.6969**






# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

## Answers to Tutorial 151 — August 15, 04

**Ans. 1.** Let the height of the pole be h feet.
h/10 = 6/2.5
h = 6 x 10/2.5 = 24 feet




**Ans. 2.** 4 cats and 3 kittens weigh = 44 kg. 3 cats and 2 kittens weigh = 32 kg. Subtracting 1 cat &1 kitten weighs 12 kg.

**Ans. 3.** (s) = $26^6$, A be the event two choose the same letter.
n (A') = p(26,6) = 1657656000
p(A) = 1 - 165765600/308915776
= .45

**Ans. 4.** 1 - p (12,5) /125 = 1 - .3819 = .618

## Tutorial - 152

